Reg. No. M. 3066. 1938. செப்டம்பர் 1.

"PAHUTHARIVU"

(REASON)

மலர் 4. இதழ் 5.

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் [illegible] மாத வெளியீடு.

தனிப்பிரதி

விலை அணா 0—1—6

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

"பார்ப்பனீயம்" பரிஷ்காரம். (பாட்டு) 1
ஆச்சாரியார் அடக்கு முறை [சேலம் எஸ். ராமநாதன்] 3
கடவுளை மற மனிதனை நினை [கே. பி. பி. சடகோபால், மாயவரம்] 7
மனித உற்பத்தி (கே. பிரமச்சாரி எம். ஏ., எல். டி.,) 12
இந்தியாவில் பெண்கள் இயக்கம் (ஜெ. கே. வேலன்) 17
பொது உடமை தேசத்தின் புதுமை. 24
மின்சார மயமான ஒரு நாடு 27
மனுநீதி விளக்கம் 33
தாய் தந்தையர் கடமை [என். சே. பி. மூத்துராஜா] 47
உறுப்பின் மூலம் அறிவது என்ன? 50
விவாகச் சிறப்பு. (இங்கர்சால்) 57
10 சுகாதார விதிகள் 63

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 4. ஈரோடு 1938 செப்டம்பர் 1. இதழ் 5.

"பார்ப்பனீயம்" பகிஷ்காரம்.

(தஞ்சை, எஸ். ஆர். சுப்பண்ணா.)

"என்னவேணும்" என்ற மெட்டு.

நம்பி மோசம் போகாதீர்
நம் நாட்டுப் புரோகிதரை நம்

தட்சணைக் கொடுத்திடென்பார்
தம்பி மோட்சம் கிடைக்கு மென்பார்
நிட்சயமாய்ப் பிதுர்களுக்கென
நீர் வார்த்துத் தாருமென்பார் நம்

அர்த்தமில்லா ஸ்லோகம் சொல்வார்
அரிசி காய்கறி பொருள் தா வென்பார்
அற்பத் தனமாய் தர்ப்பைப் புல்லை
அணிந்தே பஸ்கிப் போடச் செய்வார் நம்

மதமுங் கடவு ளென்பார்
இதமாய்ப் பூணூலை மாட்டிக் கொள்ளென்பார்
செத்தவர்க்குச் சடங்கு செய்தாலே
சுவர்க்கலோகம் கிட்டு மென்பார் நம்

இருந்தப் பொருளைக் கொடுத்து விட்டோம்
உருக்கமாய் மனக்கவலைப் பட்டோம்
பரக்கப் பரக்கப் பாடுபட்ட நம்
பொருளனைத்தையும் கொடுத்து கெட்டோம் நம்

ஈரோடு தோழர் ஈ. வெ.
ராமசாமிக் குடி அரசை
வாங்கியேப் படிக்காமலே
பார்ப்பனீயத்திற் கடிமை யானோம். நம்

"எவ்வளவுகாலம் நாம் அடிமைவர்த்தகத்தைப்பிடிவாதமாக நடத்திக்கொண்டிருந்தோம்; எவ்வளவு காலம் நாம் அடிமைகளைக் கசையாலடித்துக்கொண்டிருந்தோம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அமெரிக்கக் குருமார்கள் எவ்வளவு காலம் அந்தக் கொடுமையை ஆதரித்து வந்தார்கள் என்பதையும் எண்ணிப்பாருங்கள். கொடுங்கோன்மையை-அடிமைத்தனத்தை நான் மனப்பூர்வமாக வெறுக்கிறேன். பிறர் கட்டளையிடுவதை வெறுக்கிறேன். சுயேச்சையையே விரும்புகிறேன்"

—இங்கர்சால்

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார் பித்த மனிதர்; அவர் சொல்லும் சாத்திரம் பேயுரையாம் என்றிங் கூதேடா சங்கம்"

—பாரதியார்.

ஆச்சாரியார் அடக்குமுறை

(உரிமையுடையது.)

(சேலம் எஸ். ராமநாதன்)

சக்தி வாய்ந்த தமிழ்நாகரிகத்தை இந்தி என்ற வெடிகுண்டால் தகர்த்தெறிந்த குற்றம், தோழர் சி. ராஜகோபாலாச்சாரியாரும், அவருடைய வர்க்கத்தினராகிய கைத்தூக்கிகளையும் சான்றதாகும். தமிழ்நாட்டை உன்னத நிலைக்கு கொண்டுவந்த தமிழர்களை அமரர்களாக்கிய வீரத்தையும் உறுதியையும் இவர்கள் கொலை செய்துவிட்டார்கள். தமிழ் மன்னர்களும், புலவர்களும், வீற்றிருந்த சிம்மாஸனத்தின் மீது, உறுதி, வீரம், ஆண்மை இவைகளை வைத்துப் போற்றுவதற்கு பதிலாக பணிவு, வறுமை, பொறுமை ஆகிய இவைகளைக்கொண்டுவந்து புகுத்துகிறார்கள். இவைகள் அடிமைகளின் ஒழுக்கமன்றோ?

ஒரு காலத்தில் சர்வசக்தியோடு கூடியிருந்த தமிழ்நாட்டை இந்த அடிமை தத்துவங்களினால் அரிக்கப்பெற்று வடக்கே இருந்து வந்த லம்பாடி பாஷையை எதிர்த்து நிற்கும் ஆற்றலை இழந்து விட்டது. இந்த குற்றத்தை தோழர் ராஜகோபாலாச்சாரியார் செய்தார் என்றும் இங்கு பகிரங்கமாக கூறுகிறேன். நமது கண்டனங்களும் அபிப்பிராயங்களும் உண்மையை அடிப்படையாகக் கொண்டன என்றும் ஒழுங்கான அபிப்பிராயங்களுக்கு மதிப்பு கொடுக்கிறோம் என்றும் நமது அரசியல் எதிரிகளுக்கு கூறவிரும்புகிறோம். தனிமனிதர்களை தாக்குவது அல்லது அவர்கள் மீது துவேஷங்கொள்வது முதலியவற்றினின்று விலகி இருக்கவே நாம் விரும்புகிறோம். ஆனால் செல்வாக்கு, சுயநலம், ஓட்டுகள், பணம், கட்சிக்காரர், ஆகியவற்றை சம்பாதிப்பதற்காக, கட்சியில் சேரும் போலி மனிதர்களை நாம் மன்னிக்கமுடியாது, மன்னிக்கப்போவதுமில்லை. இன்றைய உலகமானது இளமை மனம் கொண்ட புரட்சிக்காரர்களை உற்பத்தி செய்வதில்லை. உயிரோடு கூடிய

உணர்ச்சியுள்ள புரட்சிக்காரர்களை உண்டுபண்ணுவது கிடையாது. ஆனால் பிஞ்சிலே பழுத்த குறுகிய மனமுள்ள வயோதிகர்களை உண்டாக்குகிறது. இவர்களுடைய ஒரே நோக்கம் பணத்துக்கும், அதிகாரத்துக்கும், கட்சிக்காரர்களுக்கும் வேட்டையாடுவது தான். இவர்கள் சிறிதும் தயக்கமின்றி பூமி மீது மண்டியிட்டு தங்கள் மனச்சாட்சியை விற்கத்தயாராயிருக்கிறார்கள். நமது பொருளாதார வாழ்விலும் அரசியல் வாழ்விலும் தற்போது தலைவர்களாயிருப்போர் ஒன்று அதிகார வர்க்கத்தை சேர்ந்தவர்களாய் இருக்கிறார்கள்; அல்லது தங்கள் அரசியலறிவை விற்று வயிறு பிழைக்கும் தொழிலுடையவர்களாவதாய் இருக்கிறார்கள் அல்லது புரட்சியில் நம்பிக்கையற்ற புரட்சிக்காரர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் அரை படிப்பும் அரை அறிவும் உள்ள அரை மனிதர்கள். ஜனநாயகம் என்பது ஒரு வியாபார முயற்சியல்ல. அரசியல் வாதிகளின் ஆடற்கருவியல்ல. லட்சிய புருஷர்களின் கனவல்ல. பாமர ஜனங்களின் விளையாட்டல்ல. ஆனால் மனித சமூகத்தின் ஆன்ம ஒழுக்கத்தையும் செல்வ நிலையையும் வளர்க்கும் ஒரு ஜீவசக்தியாகும். விலங்கு நிலையிலிருக்கும் மனிதனுக்கும் மனித தன்மை நிறைந்த மனிதனுக்கும் இடையே ஒரு பாலத்தை வாழ்கை போராட்டத்திலிருந்து ஓர் அமைதியான வாழ்க்கைக்கு அழைத்து செல்லும் ஆற்றல் பெற்ற பாலத்தை அமைக்குமாறு மனித சமூகத்தை தூண்டி பெருமையடைய செய்வது தான் ஜனநாயகம்.

நல்வாழ்வு வாழ ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு. பட்டினிகிடக்கும் ஒருவனுடையகையில் புஸ்தகத்தை கொடுத்து அந்நிய பாஷையை படிக்கச்செய்வது மிகவும் கொடுமையான பரிகாசமாகும். வயிறு காய்ந்து கிடக்கும் ஒரு மனிதனிடத்தில் புராணங்களை பற்றியும் தத்துவங்களைப பற்றியும் லட்சியங்களைப்பற்றியும் பேசுவது இயலாத காரியம் ஜனங்கள் முன்னிலையில், கலையும், அரசியலும், விஞ்ஞானமும், இலக்கியமும், வேற்றுமைகளாகவே முடியும். முதலில் ஆகாரம்; பிறகு தான் எழுத்து பாஷை. வயிறு நிறைய உண்டவர்கள் தான் சிந்தனை செய்ய முடியும்.

மனித வாழ்க்கை ஓர் பகிரங்க காகிதம். அதில் அறிவு, போராட்டம், துக்கம் என்ற வார்த்தைகள் பொறிக்கப்பெற்றிருப்பதை யார் வேணுமானாலும் படிக்கலாம். நாம் வீறு கொண்டு நிற்கிறோம். ஏன்? நாம் தூய்மையுள்ளவர்களாத

லால், நமக்கு நண்பர்களில்லையாதலினால் நாம் புகழையோ, ஓட்டுகளையோ விரும்பி கேட்கிறோமில்லை. பட்டவர்த்தன மாக தயை தாட்சண்யமின்றி நம்மை பின் பற்றுபவர்கள் உள் பட எல்லோருக்கும் நாம் உண்மையை எடுத்துரைக்கிறோம். எம்மை பொறுத்த மட்டில் பத்திரிகை ஓர் யுத்தகளமாயிருக் கிறது அடக்கு முறையின் வாளாயுதம் எஃகினால் செய்யப் பெற்றது. அதே எஃகினால் எமது எழுது கோலும் அச்சும் அமைந்திருக்கிறது. இந்த பேராயுதத்தை கொண்டே இதில் நாம் போராடுகிறோம். நாம் சுதந்திர வீரர்களானபடியால் இதில் நாம் இழப்பதொன்றுமில்லை. பத்திரிகையே நமது கட்சி, நமது லட்சியம், நமது ஆத்மா. வெற்றிக்கு நம்மை அழைத்துச் செல்லும் கொடி.

நாம் எவ்வளவு வேலை செய்கிறோம் என்பது முக்கிய மல்ல எத்தகைய வேலை செய்கிறோம் என்பது முக்யம். இடையனை பின்பற்றி கண்மூடித்தனமாகச் செல்வதும், ஓனாய்களின் இரைச்சலைக்கேட்டு சிதறி ஓடும் பெரிய ஆட்டு மந்தையைவிட நம்பிக்கையோடும், மன உறுதியோடும் தனது லட்சியத்தை நாடிச் செல்கிற சிறந்த வீரமுள்ள சிறிய கூட் டமே நமக்குத் தேவை.

ஒரு ஸ்திரியினிடத்தில் சில ஆசைவார்த்தைகள் சொல்லி விட்டுவா பனியிலே நனைந்து, காற்றை எதிர்த்து மைல்கள் கணக்காக சென்று வருவீர். ஆனால் நமது கட்சி நமது வாழ்கை, நமது பாஷை, இருப்பதா, இறப்பதா என்று இருக் கும் இத்தருவாயில் நூறு மடங்கு தைரியத்துடனும் சந்தோ ஷத்துடனும் சுறுசுறுப்புடனும் நீங்கள் வேலை செய்ய வேண்டாமா?

சென்னை சட்டசபை பொது ஜனங்களுக்கு நன்மை பயக்கும்படி சரியாக வேலை செய்யவில்லை. கடமையும், பிரயோஜனமில்லாது அங்கத்தினர்கள் ராஜகோபாலாச்சாரி என்ற தலைவருக்கேற்ற அங்கத்தினர்கள் தமிழ் மக்களின் கழுத்தின் மீது அமர்ந்து நெருக்குகிறார்கள். அவர்களை நாம் வீழ்த்துவோம் அல்லது நாம் வீழ்வோம். இந்தஎதிர்ப்பா ளர்களை இவர்கள் அடக்கி சமாதானப்படுத்துவதற்கு கை யாளும் முறைகள் கடந்த நாட்களின் குப்பையிலே போடத் தகுந்தவை. நம் கட்சியின் மீதுள்ள நம்பிக்கையை கொண்டு தான் போராடவேண்டும். ஏன்? இவர்களை சட்டசபையி

லிருந்து வெளியில் கொண்டுவரக் கூடாது? எதற்காக இவர்கள் அஞ்சுகிறார்கள்? நாம் தனியாக நின்றுவிடுவோமென்றோ அல்லது ஜனங்கள் துவேஷத்திற்கு ஆளாக வேண்டிவருமென்றா? எவன் ஜனங்களால் துவேஷிக்கப்படுகிறானோ அவன் பலசாலி என்ற உண்மையை இவர்கள் அறியவில்லை போலும்.

இல்லை. நாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. அடக்குமுறைக்குபதில்.................தான். இந்த பதிலை நாம் சிறிதும் தயங்காமல் அளிப்போம். பிராமண சமூகத்தோடு நாம் போராடவில்லை. ஏன் என்றால் பிராமணசமூகத்தினரும் இப்போரில் மறைமுகமாக உதவியளிக்கிறார்கள். சட்டமறுப்பை வெற்றிகரமாக நடத்தியவர்கள் தமிழர்கள். நமக்கு ஒரே ஒரு கடமை தான் உண்டு. சட்டமறுப்புக்கு பிறகும் தேர்தல் ஆனபிறகு கிளம்பிய சமூக சுயநல ஊழல்களை தெரிந்துக் கொண்டு பொய்யான- அடைய முடியாத லட்சியங்களைக் கொண்டு ஏமாற்றுகிற சுயநலக்காரர்களை தோற்கடிப்பதே நமது கடமையாகும்.

ஜனநாயக ஆட்சி என்றால் என்ன? பொறுப்பு, கடமை ஒழுங்கு ஆகிய இவைதான். ஆயிரக்கணக்கான ஆட்சி முறைகள் தோன்றி வாழ்ந்து வீழ்ந்து மறைந்து போனதை சரித்திரம் குறிப்பிட்டிருக்கிறது என்று ஆச்சாரியாருக்கு ஞாபகப் படுத்துகிறோம். இப்பொழுது கிளம்பியிருக்கும் இந்தி எதிர்ப்பாளர்களின் கூட்டத்தையே காங்கரஸ் கண்கள் நோக்கிக் கொண்டிருக்கின்றன. தேர்தலுக்கு பிறகு காங்கரஸ் கட்சியைப்போல் வேறெந்த கட்சியும் இவ்வளவு சீக்கிரத்தில் பொது ஜனங்களிடம் கெட்டப்பெயர்வாங்கவில்லை. இந்தி என்ற கட்டாய பாடத்தை மாத்திரம் எடுத்துவிட வேண்டுமென்று வற்புறுத்தினோம். ஆனால் இவற்றிற்கு மந்திரிகள் அளித்த பதில் நகைப்புக் கிடமாயிருக்கிறது. பெயரளவில் 125-பள்ளிக்கூடங்களில் வைத்திருக்கிறோம் என்றும் பையன்கள் மார்க்கு வாங்க வேண்டியதில்லை என்றும்பதில் சொல்கிறார்கள். இவற்றிற்கு எல்லாம் நமது கடைசி பதில் என்ன...............?

என்ன! இந்தியாவில் நாகரிகம் பெருகிக்கொண்டு வரும் இக்காலில்சென்னையிலும்,திருச்சியிலும்தடியடிபிரயோகமா? இது தானா காங்கரசின் பிரஜா உரிமை? உங்களுடைய அடக்கு முறை தர்பார் எத்தனை நாள் நடக்கும்? அதற்கு

—கடவுளை மற மனிதனை நினை—

(கே. பி. பி. சடகோபால், மாயவரம்.)

:O:

நாம் நம் உலகிலுள்ள ஏனைய ஜீவராசிகளையும் அலசி ஆராயுங்கால் மானிட ஜீவனே முதன்மை ஸ்தானம் வகிக்கு. அவைகளுக்குள்ள அறிவு, ஆராய்ச்சி, சிந்தனை, கற்பனை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, திடாரிக்கம் முதலிய அரிய பெரிய குணங்களில் மற்றைய ஜீவராசிதனைக்காட்டிலும் பதின் மடங்கு மேன்பட்டே காண்கிறது. ஆனால், பலத்தில் யானை, புலி, சிங்கமும், ஓட்டத்தில் மான, குதிரை, நாய்களும் ஆயுளில் ஒட்டை, யானைகளும் சரீரப் பெருக்கிலும் மனிதன் கீழ்ப்பட்டவனாய் தோற்றுகிறான். ஆகிலும் அவை தனித் தனித் தொகுதியில் மேன்பட்டேகினும் மனிதனுடைய ஆத்ம சக்திக்கு அடிமைப் பட்டவையே, அண்டிப்பிழைப்பவையே. ஆதலால் மனிதன் மற்ற ஜீவனைக் காட்டிலும் மேன் பட்டோன் என்பது உலகமறியும் உண்மைச் செய்தி. போகினும் மனித அறிவு உலக சூட்சமத்தை வெல்லக்கூடியதாயும் உள்ளது. இன்று மெய்ப்பிக்கக்கூடிய நிலைதனிலும்

ஒரு முடிவு காலம் சீக்கிரம் கிட்டும். அஹிம்ஸா முறையைப் பற்றி பேசினதும் எழுதினதும் எல்லாம் மேடை பிரசங்கம் ஏட்டு சுரக்காயுமாய் விட்டது. ஜனங்களை அடிப்பதாலும் சிறையில்வைப்பதாலும் அதிகாரள் அரசாட்சியை நடத்தமுடியாது. உங்களது ஒவ்வொரு அடியும், சிறைவாசமாகும் தூங்கிக் கொண்டிருக்கிற தமிழர்களை தட்டி எழுப்பி ஒவ்வொரு மைல்களாக வெற்றிக்கு முன்னேறச்செய்கிறது. நிராயுதபாணிகளான தமிழர்கள் கூட்டத்தில் கேள்விகள் கேட்டால் அவர்களுக்கு பதில் சொல்லாமலும் ஓட்டு எடுக்காமலும் அதற்கு பதிலாக அவர்களை போலீஸ் குண்டாந்தடிகளைக் கொண்டு அடிப்பதா? இதற்கு என்ன பொருளும் பதிலும்?

முள்ளது. ஆனால் விஞ்ஞானிகளின் நெஞ்சை விதிர் விதிர்த்து வியப்பைத் தருகிற விபசாரச் சொல்லுக் கொப்பாகிய ஆதியும் அந்தமுமில்லா ஆஸ்திகக் கடவுளனை இவ்விஞ்ஞான உலகு தூற்றுகிறது. இல்லை என்று சவால் கூறுகிறது. ஆங்காங்கு அதை அழிக்கத் தலைப்பட்டு விட்டது. அதைக் கண்டு சில கடவுளும், கடவுட் காப்பாளரும் காற்றில் பறக்கின்றனர். அவர்களது சுயநலக் கோட்டைகளும், சாத்திரக் குப்பைகளும் ஆட்டமெடுத்து அழிந்து வருகின்றன. இன்னும் சில நாட்களில் தவிடு பொடியாய்த் தரை மட்டமாய்க் காணப் போகிறது.

இன்றய "ருஷ்யாவிலோ" ஸ்டாலின் ஆட்சியிலோ, விஞ்ஞானத்துக்கு வெறுப்பான—விவேகிகட்கு அருவருப்பான மோசக் கருத்தானக் கடவுளனை உச்சரிப்போனது (கதி) ஒலிக்குழல் கொய்யப் படுகிறது. இன்னும் ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா, ஜெர்மனி, சைனா, துருக்கி முதலிய தேசங்களிலும், நம் நாடுகளிலும் கடவுட் தரகனும் காணக் கடவுளனும், அவைகளின் பீடங்களான கற்பித மதங்களும் காணக்கண் கூசவும் கண்டு ஒழியவும் மாழ்கிறதும் ஏன்? அறிவை அழிக்கும் தன்னலச் செய்கையன்றோ! தகுடுதத்த வேலையன்றோ! ஊரார் உழைப்பால் உண்டு உறங்கும் உஞ்சிவிருத்திகளின் வேலையன்றோ! இது இனித்தலைத்தூக்கித் தாண்டவமாடமுடியுமா? நாவினிக்கத்தான் சுவைக்குமா? அல்லது நாவினில் தான் நன்நரம்புதானுண்டா? உள்ளபடியே எல்லாசுரனையும் உண்டுஎன, ஓர்மதபக்தன் வாதாடுவானேயானால் செத்துப் போன உளுத்துப்போன—உறைகளை கூறுவனேதவிற மெய்ப்பிக்க—ருசுப்பிக்க ஒருவனும் வாரான். அப்படி மீறி வருங்கால் நாம் கூறும் சவால் அவனைச் சவமாக்கி விடும். இன்றேல், அவன் தப்புத் தண்டான பதிலை தானே உணர்ந்து—ரோஷம் என்னும் ரத்தம் கொதிக்க தன் கழுத்துக்குத் தானே சுருக்கிட்டுத் தற்கொலை புரிந்து கொள்வான் என்று வீரம் பேசுகின்றேன்! தோழர்களே! இவையானது, ரோஷதிற்குட்பட்ட, நன்னடக்கையுள்ளவனுக்கே தவிர கூலிக்கு மாரடிக்கும் விவஸ்தைக் கெட்டவனுக்கல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். அவை ஏன்? என்பதைத் தாங்களே தங்கள் மனதில் உதித்ததே நிற்க.

இன்று நாம் பல பிரபல அறிஞர்களைப் புகழுங்கால் அதாவது:—

அகால மரணத்தால் நேரிடும் இறப்பைப் பிழைக்க வைக்கும் டாக்டர் ஹைமனையோ, உலகிலுள்ள தூரசனிக்கு அஸ்திவாரான கலிலியோவையோ, தாவரங்கட்கு ஸர். ஜகதீஸ் சந்திரபோஸையோ, ஆணைப் பெண்ணாக்கும் பெண்ணை ஆணாக்கும் டாக்டர் வில்லார்டு பி. பங்க் என்பவரையோ, எட்டுமைல் தூரத்தில் நடக்கும் காக்ஷிதனை கையிலேயே படம்பிடிப்பாய்க் கண்டுபிடித்த ஜான் லோகிவேர்டு என்பவரையோ, சூரிய ஒளியால் மின்சாரத்தை ஓட்டும் வாஷிங்டன் ஸ்மித்லோனியனையோ, பிறர் மனதில் நினைத்துக்கொள்வதை அப்படியேச் சொல்லும் நிபுணர் ஆர்க்கஸ்ஸையோ, இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ரஸ்தாவை கண்டுபிடித்த ஆர்தர் என்பவரையோ, குழந்தைகளுக்கு முத்தம் கொடுப்பது 'ஈனம்' என்னும் மிஸ்ஸஸ் ஹெலனையோ, மின்சாரத்தை கண்டுபிடித்த எடிசனையோ, அமெரிக்காவை கண்டுபிடித்த கொலம்பஸையோ, 1829-ம் ஆண்டில் ராக்கெட் என்று சொல்லப்படும் நீராவியந்திரத்தை கண்டுபிடித்த "ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்" என்பவரையோ தந்தி அடிக்கும் மார்ஸ் துவகனம் என்ற கருவியைக்கண்டுபிடித்த சாமுவேல் மார்ஸ் என்பவரையோ, கிராமபோன் கண்டு பிடித்த (அமெரிக்கவாசி) "தாமஸ் ஆல்வா எடிஸன்" என்பவரையோ, மோட்டார் கண்டு பிடித்த போர்டு (Ford) என்பவரையோ, இன்னும் நூற்றுக் கணக்கான மைல்களுக் கப்பால் பறக்கக்கூடிய ஆகாய விமானங்களையும், நீர் மேல் செல்லக்கூடிய- நீருள் செல்லக்கூடிய, நீராவிக் கப்பல்களையும், மனிதன் கூறுகிறபடி செய்யும் இயந்திர மனிதர்களையும் ஒருவர் உருவத்தைக்கான கம்பியில்லாது டெலிகிராப் மூலம் போட்டோ எடுக்கும் அற்புதவாச்சர்யங்களையும், மனிதனன்றி, கூட்டல், பெருக்கல், வகுத்தல் வேலை செய்யும் (ஆடிட்டர் வேலைகளை) நூதனக் கருவிகள் செய்வதையும் இன்னும் விஷவாய்வு, டம்டம் பிரஸ், ரேடியோ, லினோடைப், (அச்சு இயந்திரம்) முதலானவைகளைக் கண்டு பிடித்தக் கருத்திறவான்களது தத்துவ ஆராய்ச்சியின் சாமர்த்தியங்களைக் புகழுங்கால், புகழ்மாலைச் சூடுங்கால் ஒன்றுக்கும் ஒவ்வாத ஒற்றுமைக் கொள்ளிகள்—ஊரார் உழைப்பில் உண்ணும் உஞ்சி விருத்திவர்க்கங்கள்—ஆஸ்தீகன் என்றுக் கூறிக் கொள்ளும் நாஸ்தீகப் பூனைகள்—நாமல் வர்க்கங்கள், பூணூல் கூட்டங்கள் என்ன சொல்கிறது?

அன்னவர்க்குக் கருத்தளித்தவன் நம் சுப்பன் கடவுளன் என்றும் அவனை ஆக்கியவனென்றும், அந்தப்"பவர்" அவனுக்

கில்லை என்றும் வாய் சவடால் அடிக்க சாகூசாது, மனம் பதராது பல்லவிப் பாடும் பார்ப்பாரப் புத்தியை நாம் என்னென்றுரைப்பது?

........ஐயா நின் யுருவெளித்தோற்ற மகிலத்தரிலே,
மெய்யாயிருந்தது நாட்செல நாட்செல வெட்ட
வெறும் பொய்யாய்ப் பழங்கதையாய் கனவாய்
மெல்லப் போனதுவே

என்பதைக் கொண்டோதினாலும்; மோதினாலும் சூடு சுரணை ஏற்குமா?

எவனோ சுயநலத்துக்காக லஞ்சலாவனத்துக்காக ஓ் உஞ்சிவிருத்திக் கூட்டம் தன்னை உணராதுத் தப்பிலித்தனமாய் கடவுளைக் கண்முன் கண்டதுபோல் கருத்துக்கு மாறானப் பொய்யுரைகளையும் பொய் நூல்களையும் தகுடுதத்த ஜால விநோதங்களையும் எழுதி வைத்தான். அதை நம்பிய அறிவிலிகள் அறிவேப் பெரிதெனமதிக்கும் அறிவாளிதனைத் தூஷிக்கிறான். "நாஸ்திகன்" என்ற பட்டப் பெயர்தனையும் சூட்டுகிறான். இங்கு நாமொன்று சொல்லுகிறோம்:- "உண்மைதனை, உணர்ந்து உறைப்பவன் நாஸ்திகனே அஃதற்றவன் ஆஸ்திகனே" என்றுதான்.

தவிர சானதனிக் கூட்டம், நாம் சாஸ்திரவாதியைப் புகழுங்கால் அவன், 11,108 கோயில்களையும் மூன்று மனைவிகளையும் ஆக 11,111 பெண்களைக் காதலித்தக் கற்பனைக்கான "ஸ்ரீ கிருஷ்ணன்" என்போனைப் புகழ்கிறான். ஏன்? அவனைப் போலாகவும் அஞ்சாது நஞ்சாது துர்ராகிருதமாகவதற்குத்தானே ஒழிய சற்புருஷனாய் ஆவதற்கன்று. இன்னும் சில பெண்கள் மாஜிக்கு சுகாரிகளாக ஐந்து நபரைக் காதலித்த திரௌபதிகளாகி விடுகின்றனர். அல்லாமற்போனால் அவகுச்சுக்காரிகளாகிய தாரை, மண்டோதரி அனுசூயாக்களைப்போல் ஆகிவிடுகின்றனர். பின்னாலவர்கள் ஷேடியார்களைப்போல் சுவர்க்கம் போகாது நம்மவர்கள்பால் சீந்துவாரற்ற கேட்பாரற்ற லண்டி லவண்டிகளாய் பட்டப்பேர் பெற்று விடுகின்றனர் மன்னியில் சிசுஹத்திகளாய் விடுகின்றனர் இன்னும் சிலடாம்பீகக்குச்சுகாரிகள் "அவன் இல்லாது ஆவது ஒன்றுமில்லை அவன் விதிப்படி யான் வேசி! பலாது போகக்கருவி! யான் எத்தனை விக்தைக் கவர்ந்தாலும் என்னைப் படைத்த சுப்பிரமணிக்

கன்றோவற்புதம்! வப்பழி! என்று நாகூசாது மனம் பதறாது புகழ்வது, எவ்வளவு மானங்கெட்டத் தன்மையைக் கடவுளன் அளிக்கிறாள் என்பது நமக்கு விளங்கவில்லையா? நல்ல சுக்கில சுரோனிதங்கட்கு ஜெனித்த ஓர் அறிவாளி "மதிவழி காணாது விதிவழி" என்பானோ? தோழர்களே! இதை யேன் நாம் கூறவந்தோம்? என்றால் மதம் என்னும் மண் குதிரையை நம்பி ஈசா! என்று ஆற்று சவாரி செய்யும் அறிவிலிகளான நம்மவர்கள் இனியாவது பார்ப்பானுக்கு புடலங்காய் தானம் அவரைக்காய், கத்திரிக்காய், வாழைக்காய் இன்னும் காசுக்குத் தக்கவாறு கோதானம், பூதானம்மென்று பார்ப்பனக் கால்தனில் வைத்தழுது, அவன் கால்நீர், பசுநீர் (பஞ்சகவ்யம்) முதலியவைகளை குடித்து அவன் கால் தனில் சரணாகதி அடையாது இருப்பார் என்றே இவ்வியாசம் எழுத வந்தோம். கடைசியாக ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம்.

பூத உடம்பை நீத்துச் சென்று புகழுடம்பைப் பெற்ற, ஜன நாயகவாதிகளையும், சீர்திருத்த வாதிகளையும் உலகமறியும் விவேக விஞ்ஞானிகளையும் நினைக்கவேண்டும். அப்படி நினைத்தவர்களெல்லாம் இன்று நம் கண்முன் கண்ணாய்த் தோற்றுகிறார்கள். அவரைப்போல் நாமுமாக ஓர் அழியாப் புகழ்பெற கடவுளை மறந்து மனிதனை நினைக்கக் கோருகிறோம்.

"மதிவழி காணான் விதி வழி என்போன் மடையன்."

"உன் கட்டளைகளுக்கு குழந்தைகள் எப்பொழுதும் கீழ்படிய வேண்டுமென்று பிடிவாதம் செய்யாதே! குழந்தைகளைப் பொருத்தவரையில் ஆண்டான் அடிமை மனப்பான்மையைத் தலை முழுகி ஒழித்து விடு. இதை சதா ஞாபகத்தில் வைத்துக் கொள்"

இங்கர்சால்.

மனித உற்பத்தி

(K. பிரமச்சாரி M. A., L. T.,)

சற்காலம் ஜீவித்திருக்கும் வாலில்லாக் குரங்கின் எலும்புகளையும், மனிதன் எலும்புகளையும் நன்றாய் ஆராய்ந்தால் மனிதனைவிட குரங்குகளுக்கு தலை சிறுத்தும், கைகால்கள் நீண்டும் அல்லது குட்டையாயும், தேகம் சற்று குனிந்தும் காணப்படுகிறதேயன்றி, வேறு விதங்களில் வித்தியாசமில்லை. ஒரு வகைக் குரங்குக்கும் மற்றொரு வகைக் குரங்குக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதோ அவ்வளவு வித்தியாசமே குரங்குகளுக்கும் மனிதனுக்குமிருக்கிறது. இவ் விருவர்களுக்கும் 200 எலும்புகளும், 300 தசைகளும் 32 பற்களும், தேகமுழுவதும் ரோமமும் காணப்படுகின்றன. குழந்தை தாயின் வயிற்றில் வளரும்போதும், சில சமயங்களில் பிறந்த பிறகும், உள்ளங்கை உள்ளங்கால் தவிர மற்ற பாகங்களெல்லாம் ரோமத்தினால் மூடப்பட்டிருக்கிறது. குழந்தை கர்ப்பாசயத்திலிருக்கும் நிலைமையில் குரங்குகள் கைகால்களை மடக்கி தூங்குவதுபோல் காணப்படுகிறது. குழந்தை தவழும்போது மிருகம் (குரங்கு) நான்கு கால்களால் நடப்பதை ஒத்திருக்கிறது. பால் கொடுக்கும் ஸ்தனங்களும் ஒரே மாதிரியாக அமைந்திருக்கின்றன. மனிதனுடைய பிண்டத்திற்கும் குரங்கினுடைய பிண்டத்திற்கும் அதிக வித்தியாசமில்லை. குழந்தை பிறக்க சில வாரங்களுக்கு முன்னேதான் சில வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. வாலில்லாக்குரங்கின் நஞ்சு மனிதனுடைய நஞ்சு போலவே காணப்படுகிறது. சில மானிடரும் குரங்கு குணம் உடைத்தாயிருப்பது மல்லாமல் ரூபத்திலும் குரங்கை ஒத்திருக்கிறார்கள். இக்காரணங்களால் மனிதனை "குலாமன் தூதுவன்" என்பது பொருந்தும். இதற்கு இன்னொரு ஆதாரமுமுண்டு. ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தமில்லாத மிருகங்களின் இரத்தம் ஒன்றையொன்று அழிக்கும். ஆனால் நெருக்கமான சம்பந்தமுள்ள மிருகங்களின் இரத்தம் ஒன்றை யொன்று கொல்லாது. உதாரணமாக நாயும் நரியும் நெருக்கமான சம்பந்தமுள்ள ஜந்துக்களாகையால், நாயின் இரத்தத்தை நரியின் இரத்தக் குழாயில் விட, வித்தியாசம் ஒன்றும் தோன்றாது. ஆனால் நாயின் இரத்தத்தை முயலின் இரத்தக்

குழாயில் விட்டால் முயல் இறந்துபோம். இதுபோலவே, வாலில்லாக் குரங்கின் இரத்தத்தை மனிதன் இரத்தக் குழாயில் விட்டால் வித்தியாசம் ஒன்றும் தோன்றாது. அந்த இரத்தமே வாலுள்ள குரங்கில் சம்பந்தப்பட்டால் அதை விஷப்படுத்தி இறக்கச் செய்யும். ஆகையால் மனிதன் வாலில்லாக் குரங்கிற்கு நெருக்கமான சம்பந்தமுடையவனாகவும், பூர்வ வாலில்லாக் குரங்கு சந்ததியைச் சேர்ந்தவனாகவும் இருக்கிறான். இச்சம்பந்தத்தை 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேனாட்டில் விளம்பரப் படுத்தியபோது இதை ஜனங்கள் எளனஞ் செய்தார்கள். ஆனால் இதை இப்போது அங்கீகரிக்காத அறிவாளிகள் ஒருவருமில்லையென்றே சொல்லலாம்.

மனிதன் குரங்கிலிருந்து வந்தானென்றால், குரங்கை மனிதனாக மாற்றமுடியுமா வென்று சிலர் கேட்கின்றனர். இது முடியாத காரியந்தான். ஆப்ரிகா தேசத்துக் கரியமனிதனை வெள்ளைக்காரனாக மாற்றமுடியுமானால் அப்போதே குரங்கை மனிதனாக மாற்றலாம். ஆனாலும் வெள்ளை மனிதனும், கரிய மனிதனும், மங்கோலியனும், பர்மாக்காரனும் ஒரே வேரிலிருந்து உற்பத்தியான பங்காளிகளென்று இப்பொது எல்லோரும் ஒத்துக்கொள்வதற்கு நியாயம் உண்டு. இதைப்போலவே, வாலில்லாக் குரங்குமனிதனுடைய தூர பங்காளியாகும். மனிதன் குரங்கிலிருந்துஉற்பத்தியானானென்றால் தற்கால மனிதன் அவ்வாறு உண்டானானென்பதல்ல. ஆனால் தற்கால மனிதனுடைய மூதாதையும், தற்கால வாலில்லாக்குரங்கின் மூதாதையும் ஒரே கிளையிலிருந்து உற்பத்தியாகி வெவ்வேறு பிரிவாகச் சப்பட்டதென்பதே அதன் அர்த்தம்.

மனிதன் மூதாதை எப்படிப்பட்டவனென்று இப்போது பார்ப்போம். தேக அழகிலும், புத்தி சாதுர்யத்திலும் ஞானத்திலும் மேன்மையுள்ள தற்கால நாகரிக மனிதனை கொரில்லா உராங்குட்டான் என்ற வாலில்லாக் குரங்குகளுடன் ஒத்திழைப்பதை விட்டு அனாகரிக காட்டுமிராண்டிகளுடன் ஒத்திழைத்துப் பார்த்தால் அதிக வித்தியாசமிராது. அந்தக் காட்டு மிராண்டியை காட்டிலும் தாழ்ந்த வகையான புத்திக்கூர்மையில்லாத தேக அந்தமில்லாத மூடத்தனமான மனிதனை யோசிப்போமானால் அவனே தற்கால மனிதனுடைய மூதாதையாவன். அவனிடத்திலிருந்தே நாமும் நமது பங்காளிகளும் உற்பத்தியானோம். இப்படிப்பட்ட மூதாதைகளின் எலும்புகள், பல நமக்கு கற்புத்தகங்களில் அகப்பட்டிருக்கின்றன. அவ்வெலும்புகளை சிலர்

மனிதக் குரங்கென்றும், சிலர், மனிதனுக்கும் குரங்கிற்கும் மத்தியிலுள்ள பிராணியென்றும் தீர்மானிக்கிறார்கள். அப்படி அகப்பட்ட எலும்புகளில் இங்கு நான்கைப்பற்றிக் கூறுவோம்.

1857 ம் வருஷத்தில் மண்டை ஓடுகள் அகப்பட்டதை 'நியாண்டர்தால் மனிதன்' (Neanderthal Man) என்று சொல்வது வழக்கம். அதன் நெற்றி தாழ்ந்து கண் புருவங்கள் (Eye-brow) கொரில்லாவைப் போல காணப்பட்டாலும், மூளை அமைப்பையும், அளவையும் கவனித்தால் அதை மனிதனென்றே கருத வேண்டும். அவனால் உபயோகிக்கப்பட்ட கல் ஆயுதங்களைக் (Implements) கவனித்தால் அவன் அறிவிலும், கைத்திறத்திலும் மேம்பட்டவனென்பது ஏற்படும். அவன் சற்றேறக்குறைய 500 000 வருஷங்களுக்கு முன்னமே குகைகளில் (Caves) வசித்திருந்தவனென்பது பண்டிதர்களின் அபிப்பிராயம்.

34 வருஷங்களுக்குப்பிறகு ஜாவா தீவில் பிதிகேன்த்ரோபஸ் (Pithecanthropus) அல்லது ஜாவா மனிதன் என்று பெயர் கொடுக்கப்பட்ட மற்றொரு மனிதனுடைய எலும்புகள் காணப்பட்டன. அவன் தலையைக் கவனித்தால் கிப்பன் (gibbon) என்ற மனிதக் குரங்கின் கிளையென்றும், மூளை அளவையும் அமைப்பையுங் கவனிக்குங்கால் மனிதனுக்கும் குரங்குக்கும் மத்திய அந்தஸ்துள்ள ஒரு மனிதனென்றே பாவிக்கப்படுகிறது. இவன் மூளை அளவு தற்கால வாலில்லாக் குரங்கின் (Gorilla) மூளையளவை விட பெரிதாகவும், முன்னே சொல்லிய நியான்டர்தால் மனிதனுடைய மூளையளவுக்கு குறைந்ததாகவும் காணப்படுகிறது. தற்கால வாலில்லாக் குரங்குகளை விட புத்தி சாதுர்யத்தில் மேன்மை அடைந்திருக்கலாமென்று யூகிக்க முடியுமானாலும், இதை நிரூபிக்க அவனால் செய்யப்பட்ட ஆயுதங்களாவது, மற்றைய ஆதாரங்களாவது ஒன்றுமில்லை. இவன் சுமார் 200 அல்லது 300 ஆயிர வருஷங்களுக்கு முன்னே ஜீவித்திருந்தானென்று நினைக்கப்படுகிறது.

சுமார் 18-வருஷங்களுக்கு முன் "பில்ட்டவுன் (Piltdown man) மனிதன்" என்ற மற்றொரு மனிதனுடைய எலும்புகள் அகப்பட்டன. இது பார்வையில் குரங்கு ரூபத்தையும் மனித ரூபத்தையும் கலந்திருப்பினும், மூளையளவில தற்கால மனிதன் மூளை அளவைப் பெற்றிருக்கிறது. "க்ரோமேக்னான் (Cao-magnon man) மனிதன்" என்ற மற்றொரு மனிதன் ரூபலாவணயத்திலும் மூளையளவிலும் தற்கால மனிதனை ஒத்திருக்கிறான்.

மேற் சொன்னவைகளும், ஆப்ரிக்காவிலும் மற்ற இடங்களிலும் அகப்பட்டிருக்கும் எலும்புகளும், மனிதனுடைய மூதாதை வாலில்லாக் குரங்கிலிருந்தே உற்பத்தியானானென்பதை ஸ்திரப்படுத்துகின்றன. மேற்சொன்ன "மனிதர்கள்" எல்லாரும், தற்கால மனிதனும், ஒரே வேரிலிருந்து உற்பத்தியாகி வெவ்வேறு கிளைகளாகப் பிரிந்திருக்கலாமென்று இதனால் விளங்கும். முதல் முதல் மனிதனின் மூதாதை இந்தியாவிற்கு தென்மேற்கில் லெமூரியா (Kemuria) என்னும் தேசத்தில் உற்பத்தியாகி, ஆப்ரிகா, ஆசியா, ஆஸ்திரேலியா கண்டங்களுக்கு பரவியிருக்க வேண்டுமென்பதே சாஸ்திரிகளின் துணிபாம். மேற் சொன்ன மூன்று கண்டங்களும் ஒரு காலத்தில் நிலப்பாகமாக இருந்ததென்றும், சமுத்திர மாறுதல்களால், பிற்காலத்தில் வெவ்வேறு கண்டங்களாகப் பிரிந்ததென்றும் முன்னதிகாரத்தில் குறிப்பிட்டோம். மனிதன் லெமூரியாவில் உற்பத்தியாகி மற்ற விடங்களுக்குப் பரவினான் என்னும் உத்தேசத்திற்கேற்ப, ஜாவா தீவிலும், ஆப்பிரிக்காவிலும், பூர்வீக மனிதனுடைய எலும்புகளைக்கண்டோம். லெமூரியா என்னும் நாடு இப்போது இந்து மஹா சமுத்திரத் தரையாக விருப்பதால், பூர்வீக மனிதனுடைய எலும்புகளகப்படுவது அசாத்தியம். ஆனால் இப்பாகம் ஒரு காலத்தில் உயருமானால் அப்போது மனிதனுடைய பூர்வீக மூதாதைகளின் எலும்புகள் அகப்படுமென்றெதிர் பார்க்கலாம்.

மனித விர்த்தியை ஆராயும்போது அவனின் மூளை அபி விர்த்தியைத்தான் முக்கியமாய் கவனிக்கவேண்டி யிருக்கிறது. இதையும்; இவன் எபபடி சமூக வாழ்வு அடைந்தான் என்பதையும் சுருக்கமாக இங்கு கவனிப்போம். ஆதியில் மனிதனுடைய மூதாதை தற்கால வாலில்லா குரங்குகளைப் போல, மரங்களில் வசித்திருந்தபோது ஏராளமான உணவும், சில விரோதிகளுமே யிருந்தன. பூமி மாறுதல்களினால் மரங்கள் அழிய, அவன் கீழே நடக்க நேரிட்டது. பலவித விரோதிகளாகிய மிருகங்களைப் பார்க்க, கண் பார்வை அதிகரித்தது அவைகளைத் தாக்க கைகளை உபயோகித்தான். உணவைத் தேட நெடுந்தூரம் நடக்கவும், ஓடவும் தேகத்தின் பாரத்தைத் தாங்கவும், கால்கள் உரம்பெற்று, நிமிர்ந்து நடந்தான். இவ்வித மாறுதல்களே அப்பிராணியின் மூளை அபிவிர்த்திக்காரணமென்று சொல்லுகின்றனர். மூளை சற்று அபிவிர்த்தியானதும் அதன் அறிவும் அதிகரிக்கிறது. விரோதிகளைத் தாக்க மரத்தையும் பிறகு கற்களையும் உபயோகிக்கும் திறமை உண்டாகிறது. தற்காலக் குரங்குகள் பல இவ்வாறு கற்களை எறிவதால், அறிவின்

சற்றே மேம்பட்ட மனித மூதாதை கல்லெறிவது ஆச்சரியமல்ல. இப்படிப் பல்லாயிர வருஷஞ் சென்ற பிறகு கற்களை ஒன்றோ டொன்று தேய்த்துக் கல்லாயுதங்கள் செய்யத்தெரிந்துகொண் டான். இன்னும் பல்லாண்டுகள் செல்லக் கோடரியும், பிறகு காம்புள்ள கோடரிகளும் செய்யவும் அவைகளைக் கொண்டு பெரிய விலங்குகளையும் மற்ற விரோதிகளையும் தகர்க்கவும், அதன் பிறகு வில்லும் அம்பும், விலங்குகளின் தோல்களை எலும் பூசியினால் தைத்து, ஆடைகள் செய்யவும், அறிவுவிர்த்தி யடைய அடைய புதிய புதிய ஆயுதங்கள் செய்யவும் தெரிந்து கொண்டான். இன்னும் அநேகாயிரம் வருஷங்கள் சென்ற பிறகு மண்ணில் கலந்திருக்கும் செம்பு, பித்தளை, இரும்பு முதலிய உலோகங்களினால் ஆயுதங்கள் செய்து கொண்டான்.

மனிதனுடைய மூதாதை முதலில் மரங்களில் வசித்திருந்து பழம் கொட்டை முதலியவைகளைத் தின்று, பிறகு பூமியின் மேல் சஞ்சரிக்க நேரிட்டபோது, மிருகங்களை வேட்டையாடி மாமிச பக்ஷணியாக மாறி, பிறகு நெருப்பைக்கண்டுபிடித்து மாமி சத்தை வெயிலில் வெதுப்பி உண்ணவும், அதன் பிறகு தானிய வகைகளைத் தின்னவும், தானியத்தை விர்த்தி செய்யப் பயிர்த் தொழில் செய்யவும் ஆரம்பித்தான்.

மனிதன் முதலில் தனிமையாகவும், பிறகு தன் பெண்ஜாதி பிள்ளைகளுடனும் வேட்டையாடினபோது அவனுக்கு சமூக வாழ்வு இன்னதென்று தெரியாது. இப்போதிருக்கும் பெரிய வாலில்லாக்குரங்குகளைப்போல மனித மூதாதைகள் குடும்பம் குடும்பமாக வசித்திருந்தார்கள். அதன் பிறகு பூமியின் மாறுதல் களினாலும், மலை உயர்வதினாலும், பனிக்கட்டிப் பிரளயத்தி னாலும் குளிர் தாங்க முடியாது வெளியில் வசித்திருந்த மனி தன் குகைகளில் வசிக்க நேர்ந்தது. இப்படிப் பல குடும்பங்கள் குகைகளில் வசிக்க நேரிட்டபோது சமூக ஜீவனம் (Social life) முதன் முதல் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் ஒரே இடத்திற்காக குடும்பங்களுக்குள் சண்டை சச்சரவு நேரிடினும், பிறகு சமாதா னம் ஏற்படும். மனித மூதாதையர் குகைகளில் வசித்தார்களென் பதற்கு குகைகளில் காணப்படும், கல்லறைகளும் (Burial Places) அவர்கள் உண்ட மிருகங்களின் எலும்புகளும், தந்தம் (Ivory) எலும்பு முதலியவைகளின்மேல் அவர்களால் செதுக்கப்பட்ட படங்களுமே (Drawings) சாக்ஷிகளாம். பாஷை முதலில் இல் லையெனினும் பிறகு ஏற்பட்டு ஒருவரோடொருவர் பேச நேர்ந்த போது உண்மையான சமூக வாழ்வு ஏற்பட்டது. ஒருவர் கரு

இந்தியாவில் பெண்கள் இயக்கம்

காங்கரஸ் சோஸியலிஸ்ட் பத்திரிகையில் தோழர் கமலாதேவி சட்டோபாத்யாயி அவர்களால் எழுதப்பட்டது.

(ஜெ. கே. வேலன் மொழிபெயர்ப்பு)

மனித சரித்திரத்திலேயே ஒரு காலத்திலும் இல்லாத வாறு நசுக்கப்பட்டவர்களும் (ஆனால் இயற்கையில்) வீரம் நிறைந்தவர்களும் ஒரு கட்டுப்பாடான ஸ்தாபன ரீதியாக வேலை செய்தது இல்லை. ஆனால் 1918-ம் வருடம் முடிவடைந்த உலக யுத்தத்தின் முடிவிலிருந்து இந்திய சரித்திரத்தில் மேலே சொன்னவாறான நிலை ஏற்பட்டது. அந்த காலத்திலேதான் மனித சமூகத்தின் முன்னேற்றமான புரட்சியின் வித்து விதைக்கப்பட்டது' தூங்கிக்கிடந்த மனித சமூகம் ஒரு புத்துணர்ச்சிப்பெற்று தலைநிமிர்ந்தெழுந்தது. ஆனால் இன்றைய தினம் நடைபெறும் போராட்டமானது முந்திய செய்கைகளுக்கு மிகவும் மாறுபட்டுள்ளது. ஏனென்றால் உலகத்தில் தோன்றிய தொழில் புரட்சியால் மனித சமூகம் ஒரு திடுக்கிடும் உணர்ச்சியைப் பெற்றது. பழைய போராட்டங்களில் விஞ்ஞான தெளிவுகள் சம்பந்தப்படாமலிருந்தன. இன்றைய போராட்டமோ விஞ்ஞான முடிவுகளை அடிப்படையாகக்கொண்டுள்ளன. பழைய உலகமான உண்மையல்லாத வேஷங்களாலும் விஞ்ஞான முடிவுகளுக்கு பொருத்தமற்ற மூட நம்பிக்கைகளாலும், ஆராயாமல் எதையும் நம்புதல் என்ற கொள்கையாலும் ஆட்டப்பட்டு வந்தது. இதோடு இல்லாது பழைய மனிதன் எதையும் சொன்னவுடன் மறுக்காமல் நம்பும்படி நிர்பந்திக்கப்பட்டான். ஆனால் இன்றைய

த்தை மற்றொருவர் தெரிந்துகொள்ளவும், அதன்படி நடக்கவும் நியாயமும் மந்தகளும் மற்ற எல்லா விஷயங்களுமேற்பட்டு நாகரிகத்திற்கு விதை நடப்பட்டது.

மனிதனின் நிலை இவைகளுக்கு நேர்முரண் பட்டுள்ளது. இன்றைய மனிதன் தன்னை சூழ்ந்திருக்கும் கபடம் என்ற குறுகிய வலையிலிருந்து கிழித்துக்கொண்டு வெளிவர ஆசைப் படுகிறான். பாமர மக்களை வாட்டி வரும் அறியாமையி லிருந்து அவர்களை விடுவிக்க ஆசைப்படுகிறான். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் கடவுள் நம் பிக்கை உள்ளவன் என்று ஏமாற்றப்பட மறுக்கிறான். பணக் காரமனித தெய்வங்களுக்கு (கருதப்படுகிற) தலைவணங்கமறுப் பதோடு எதிர்க்கவும் செய்கிறான். தான் ஒரு சுதந்திர வீர னாக ஆக ஆசைப்படுகிறான். அப்படி அவன் அடைய விரும் பும் சுதந்திரத்தை தடுப்பவர்களை தண்டிக்கவும் துணிவு கொள்ளுகிறான் மேன்மையாய் கருதப்பட்ட ரிஷிகளால் சொல்லப்படும் பாவபுண்ணிய செய்கையை மறுத்து அதன் பயனாய் உலகில் ஏற்படும் விபசாரம், கொடிய நோய்கள் முத லியவைகளில் இருந்து மனித சமூகத்தை விடுவிக்க ஆசைப் படுகிறான். மனிதன் தன்னம்பிக்கையால் தன்னைப்பற்றி பெருமைப்பட ஆசைப்படுகிறான். ஆனால் அறிவுக்குப் பொருத்தமில்லாத புறப்பான மோக்ஷ சாம்ராஜ்ய போர்வை யில் மறைய வெறுக்கிறான்.

இந்தப் பொதுப்படையான போராட்டத்தில் ஆண் இன மும் பெண் இனமும் அதிகம் வேலை செய்துள்ளது. ஆனால் சமூகப் போராட்டத்தில் இனச் சண்டையை சேர்ப்பது இது வரை வழக்கில் இருந்ததில்லை. நாகரீகத்தின் நுணுக்க ஆராய்ச் சியின் பயனாய் ஆண் பெண் இனம் இரண்டு எப்படி ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக்கிறது என்ப தைக் காணலாம். இனச் செய்கைகள் சமூக பொருளாதார அமைப்பை விட்டு தனித்திருப்பவையல்ல. ஆனால் சமூகத்தில் உயர்ந்தவர்கள் என்று சொல்லி மற்றவர்களை ஆதிக்கம் செய்து வரும் வகுப்பார் இந்தச் செய்கைகள் சமூக பொருளாதாரங்களி லிருந்து தனிப்பட்டவை என்று மற்றவர்கள் கருதும்படி சமூ கத்தை அமைத்துள்ளார்கள். ஒரு சமூக இயக்கத்தை சரியாய் அறிந்துகொள்ள வேண்டுமானால் மேலே சொன்ன உண்மை களை ஆராய்வது ஒரு தவிர்க்க முடியாத கடமையாகும். முக் கியமாய் மாதர் இயக்கம், பெயருக்கு பெண்களை பிரிப்பதாய் இருந்தாலும் அதன் உண்மை அஸ்திவாரம் சமூக பொருளாதார அமைப்பில்தான் இருக்கிறது. பெண்களின் நிலையை சாதாரண மாய் வழங்கிவரும் கல்வி நாகரிகம் முதலியவைகளிலிருந்து தீர் மானிக்கமுடியாது. ஆனால் மேற்படி சமூகத்தின் மூலாதார அமைப்பை எடுத்துக்கொண்டால்தான் முடியும்.

இந்த நிலையில் பெண்களின் சரித்திர முன்னேற்றத்தை ஒரு சலனப்படமாக பிடித்துக்காட்ட ஆசைப்படுகிறோம். அந்தப் படத்திற்கு ஒரு சரியான- சரித்திர பூர்வமான பின் திரையை (Back Ground) உபயோகிக்க வேண்டும். விஞ்ஞானம் என்றதை தூரதிருஷ்டிக் கண்ணாடியாகவும் பெண்கள் அறிவு விசாலமில்லாத ஆரம்ப காலத்திலிருந்து இன்று ரஷ்யாவில் பெண்கள் உள்ள முன்னேற்றமான நிலைக்கு ஆச்சரியப்படும்படி முன்னேறி வந்ததை கதையாகவும் வைத்து படம் பிடிக்க ஆசைப்படுகிறோம். ஆனால் பெண் சமூக சரித்திரமானது பரிணாமவாத பரம்பரையில் ஒரு சரியான மார்க்கத்தில் வந்ததாகத் தெரியவில்லை.

பெண்கள் தங்கள் சமூகத்தில் அடைந்துள்ள சாதாரண அறிவையாவது அடைந்தால் அல்லது அந்த ஜன சமூகத்தில் தங்கள் நிலையையும் பொருளாதார இயற்கையும் அறிவது முடியாது. எங்கே பெண்கள் பொருளாதார நிலையில் கட்டுப்பட்டவர்களாய் இருக்கிறார்களோ அங்கே பெண்கள் தாழ்வாகவும் சுதந்திரமற்றவர்களாகவும் இருப்பார்கள். எங்கே பொருளாதார நிலையில் கட்டுப்படாதவர்களாய் இருக்கிறார்களோ அங்கே பெண்களின் நிலை முன்னேற்றமாயும், சுதந்திரமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

நாகரிகம் அடைந்த சமூகங்களில் பெண்களுக்கு சில உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஆனால் சாதாரண நிலையில் உள்ள சமூக பெண்கள் ஆரம்ப காலத்தில் மேற்படி நாகரிக சமூகத்தாரால் மறுக்கப்பட்ட உரிமைகளை அனுபவித்து வந்தார்கள்.

அந்த ஆரம்ப காலத்திய சாதாரண பெண்கள் தங்கள் பழக்க வழக்கங்களில் சுயேச்சையுடையவர்களாய் இருந்தார்கள். ஏனென்றால் அந்த காலத்திய பொருளாதார அமைப்பு மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தது. ஆண்களும் பெண்களும் தங்கள் வேலைகளை பகிர்ந்து செய்து விட்டு அதன் லாப நஷ்டங்களை சரிசமமாக பகிர்ந்து கொண்டார்கள். வெறும் பரசாங்குகள் அவைகளுடைய கீழான திட்டங்களுடனும், போலி பொறுப்புகளுடனும் வாழ்க்கை நிலையை கீழாக்கும் நோக்கத்துடன் நுழையமுடியாது. ஆனால் தனி உடைமை ஆசை வளர்ந்தஉடன் அதாவது ஜமீன்களும், சிற்றரசுகளும், வல்லரசுகளும் முளைக்க ஆரம்பித்த உடன் பழைய ஏழ்மையான சாதாரணவாழ்க்கை நிலை சீர்குலைக்கப்பட்டது. புதிய சிக்கலான பொருளாதார உருவங்கள்

பிறந்தன. சமூக அமைப்புகள் எதிர்பாரா வகையில் திடீர் திடீர் என்று மாற்றி அமைக்கப்பட்டு வந்தன. பெண்கள் நிலையும் ஷை மாற்றங்களையொட்டி வேறுபட்டு வந்தன. தீராப்பசியுள்ள உடமை என்னும் பேராசையிலிருந்து ஏகாதிபத்தியம் தனது ஆயுதப் பெருக்குடனும் பேரிடும் கொடிய ஆசையுடனும் வளர ஆரம்பித்தது. இந்த நிலையில் சண்டை செய்வது ஆண்களின் தனியுடமை ஆக்கப்பட்டது. பெண்கள் தாழ்மையாய் கருதப்பட்டார்கள். ஏனென்றால் ஷை பேராசை பிடித்த ஏகாதிபத்திய முதலாளிகளால் ஆரம்பிக்கப்படும் சண்டைகளில் வெற்றி பெறும் கூட்டத்தார் தோல்வி அடையும் கூட்டத்தாரின் பெண்களை அடிமையாக்கினார்கள். அத்துடன் மட்டும் நில்லாது இறந்தவர்களின் பெண்கள் உயிர்வாழ்பவர்களின் அடிமைகள் என்றும் கருதப்பட்டது. இந்த நிலையில் மக்கள் சமூகத்தில் மற்றொரு அடிப்படையான மாறுதல் ஏற்பட்டது. அதுதான் மற்றவர்கள் உழைப்பில் உண்டுகளிக்கும் சோம்பேறி பணக்கார வர்க்கம் என்றும் வாழ்நாள் முழுதும் நெற்றி வியர்வை கொட்ட பணக்கார கூட்டங்களுக்கு உழைத்துப்போட்டு கஷ்டப்படும் ஏழைமக்கள்-பட்டாளி மக்கள் என்றும் பிளவுபட்டது. சரீரத்தால் பாடுபடுவது தாழ்மையின் அடையாளம்என்று கருதப்பட்டது. சமூகம் இவ்வாறுபிளவுபட்டவுடன் பெண்களும் அவரவர்கள்நிலைக்கு தக்கவாறு ஆண்களால்பலியாக்கப்பட்டார்கள். அதாவது சற்று மேல் நிலையில் உள்ள பெண்கள் பணக்காரர்களாலும் ஏழ்மை நிலையில் இருந்த பெண்கள் ஏழைகளாலும்அடிமையாக்கப்பட்டார்கள். இந்தசமயத்தில்பணக்காரர்களால் அடிமையாக்கப்பட்ட பெண்கள் தங்களிடம் நிரந்தரமாய் இருந்து வந்த பொருளாதார வேலைகளை கை விட ஆரம்பித்தார்கள். அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் சரீரபலத்தையும், பொருளாதார பலத்தையும் இழந்து வந்தார்கள். ஏனென்றால் அவர்கள் இடும் சிறிய வேலைகளையும் செய்ய வேலையாட்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆக வேலையற்றவர்களாய் விட்டார்கள். வேலையற்று போகவே மூளையும் (அறிவும்) சரீர உறுப்புகளும் பலம் இழந்து சோம்பேறி ஆனார்கள். இந்த சமயம் பிரபுத்துவ நிலைமை தன்னுடைய கொடூரமான தன்மைகளுடன் தலை நீட்டிற்று. மேலே சொன்ன எல்லாம் கூடி பணக்கார வர்க்கத்தின் பெண்கள் கொஞ்சம் கொஞ்சமாய் பிரகாசித்துக் கொண்டிருந்த தங்கள் நிலையிலிருந்து ஆண்களால் முழுதும் அடிமையாக்கப்பட்டார்கள். இதே சமயத்தில் ஏழைகளின் பெண் சமூகமும் அதிக வேலைகளாலும் வேலையே சில தொடர்ந்த நாட்களுக்கு இல்லாமையாலும் கீழான நிலையை அடைந்தது.

ஆக ஏழை பணக்காரன் என்று தாம் பாராது பொதுவாக பெண்கள் அடிமையாக்கப் பட்டார்கள்.

ஆண்கள் தங்கள் சோம்பேறி வாழ்வை நடத்த புதிய மார்க்கங்களை தேடிய பொழுது பெண்கள் தங்களுக்கு அதைப்போல் புதிய மார்க்கங்களை தேடுவதை தடுத்தார்கள். பெண்கள் இதேபோல் பல வழிகளில் தடுக்கப்பட்டு குழந்தைகளை உற்பத்திச் செய்யும் மெஷின்களாக ஆக்கப்பட்டார்கள். ஆண்கள் அந்தஸ்துபல வழிகளிலும் உயர ஆரம்பித்தது. ஆனால் பெண்கள் அந்தஸ்து வர வர குறைய ஆரம்பித்தது. அவள் சமூகத்தின் ஒரு பொருளாதார அங்கம் என்பதிலிருந்து பிரிக்கப்பட்ட உடனேயே அவள் தனது பொருளாதார சுதந்திரத்தை இழந்து விடுகிறாள். பொருளாதார சுதந்திரம் இல்லை என்று ஏற்பட்ட அடுத்த நிமிஷமே ஆண்களின் அடிமை ஆகிறாள். அவள்மிகவும் மிருதுவாகவும், சுதந்திர மற்றவளாகவும், பாதுகாப்புடனும் வளர்க்கப் படுகிறாள். விரைவில் அவள் ஓர் மனிதனின் சொந்த சொத்தாக ஆக்கப்படுகிறாள். அதாவது மத ஆதிக்கத்தாலும் தரும சாஸ்திரங்களின் உதவியாலும், சட்டங்களின் கூட்டுறவாலும் எப்படி மனிதன் மற்ற அசேதனப் பொருள்களை தன் உடமை ஆக்கிக் கொள்கிறானோ அதைப்போல் பெண்கள் சமூகத்தை தங்களுக்கு அடிமையாக்கி தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ளவும் ஷ்டி சாதனங்களை பயன்படுத்திக் கொள்ளுகிறான்.

ஏகாதிபத்தியம் தனது கொடிய கரங்களை நமது வீரமுள்ள மூதாதையர்களின் தலையில் வைக்க ஆரம்பிக்கும் முன்னால் எல்லாப் பெண்கள் அதிகப்படியான சுதந்திரங்களைப் பெற்றிருந்ததுடன் சமூகம் நல்ல வளர்ச்சி பெறுவதற்காக அதிகம் உழைத்து வந்தார்கள். ஆனால் வர்க்க ஆதிக்கம் கொண்ட சமூகமும் நசுக்கும் தன்மையுள்ள ஏகாதிபத்தியமும் மெதுவாக பெண்களை அடிமையாக்க ஆரம்பித்தன.

சமூக மாறுதல்களுக்கும், சமூக சட்டங்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும், நாம் உயர்ந்த வர்க்கங்களைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. ஏனென்றால் சமூகங்களில் எந்த வர்க்கம் ஆதிக்கம் செலுத்துகிறதோ அவைகளின் செய்கை தான் எல்லோராலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பணக்காரத்தன்மை பொறுப்பின் அடையாளம் என தந்திரமாக புகுத்தப்பட்டது. இந்த (போலி) காரணத்தால் தான் பணக்காரர்கள் தங்கள் உயர்வான நிலையை அடைந்தார்

கள் என கருதப்பட்டது. உடை எப்படியோ அப்படியே சமூகச் சட்டங்களும். இதற்கு சிலவிதிவிலக்குகளும் இல்லாமலில்லை. ஏனென்றால் எதிர்பாராமல் ஏற்படும் சந்தர்ப்ப அவசியங்களை ஒட்டி காலாகாலங்களில் மாற்றம் அடைந்ததும் உண்டு. அக்காலங்களில் இந்த அமைப்புகள் நன்மையைச் செய்தும் வந்தன.

பிரபுத்துவ நிலை வளர ஆரம்பித்தபொழுது புதிய புதிய சமூகச் சட்டங்களும், பழக்க வழக்கங்களும் புகுத்தப்பட்டன. ஷை புதிய செய்கைகளின் உதவியால் ஆண் சமூகம் தங்கள் (நீதியற்ற) பாத்தியதைகளை அனுபவிக்க ஆரம்பித்தன. மதம் இந்த புதிய அமைப்பில் முக்கியத்துவம் வகிக்கும்படி செய்யப் பட்டது. இவைகளை பாதுகாக்கவும் பெண்கள் சமூகத்தை இன்னும் பலமாக கட்டுப்படுத்தவும் புதிய தெய்வீக தொடர்பை உண்டாக்கினார்கள். அதனுடைய பிரதான கொள்கை பெண் சமூகத்தை "M" என்ற பொருளற்ற ஒன்றை மூலதனமாகக் கொண்டு ஆதிக்கம் செலுத்துவதாகும்.

புருஷ வணக்கம் இதில் அதிக முக்கியமானது. பெண்கள் அவன் (புருடன்) அன்றி ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை ஏற்பட்டது. புருடனுக்கு நன்றி செலுத்துவது ஒரு பிரதான புண்ணியமாக கருதப்பட்டது. ஆக இவைகளிலிருந்து கல்யாணம் ஒன்று தான் பெண்களின் உண்மையான வேலை என ஏற்பட்டது. இன்னும் பெண்களின் வாழ்நாட்களின் நோக்கம் அவர்களை ஷை கல்யாணத்திற்கு தகுதியானவர்களாய் ஆக்கிக்கொள்வது தான் என வகுக்கப்பட்டது. இதைவிட இன்னும சற்று ஆழ்ந்து ஆராய்ந்தால் எவ்வளவுக்கு எவ்வளவு அவனுக்கு கீழ்படிந்தும் அவனால் துன்பங்களையும் அடைகிறாளோ அவ்வளவுக்கவ்வளவு நிச்சயமாயும் சீக்கிரமாயும் மோக்ஷத்திற்கு வழி செய்தவளாவாள் என்று புகுத்தப்பட்டுள்ளது. ஆண்பெண் இருவரும் அவர்களின் குழந்தை பருவங்களிலிருந்து மேல் சொன்ன சட்ட திட்டப்படி பழக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தங்கள் பருவ காலங்களில் சுலபமாய் மேல் சொன்ன தத்துவங்களுக்கு இரையாகி விடுகிறார்கள். ஆண்களை திருப்திசெய்யவும் அவர்களுக்கு தொண்டு செய்யவும் தயாராக இருக்கவேண்டுமென்பதையும் ஆண்களுக்கு பெண்கள் எந்தவிதத்திலும் சமநிலை உடையவர்கள் அல்ல என்பதையுந்தான் போதிக்கப் படுகிறார்கள். ஆனால் சுயேச்சையாகவும் தனக்குத் தோன்றும் எண்ணப்படியும் செய்யவிடுவதில்லை. இரண்டுவித்தியாசமான ஒழுக்கங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. பெண்களுக்கு கடுமையான ஒழுக்கமும் அதாவது சமூகத்தின் ஒழுக்கங்களை காப்பாற்றுவது பெண்க

ளின் கடமை என்றும், ஆண்களுக்கு இவைகளுக்கு முரண்பட்ட ஒரு லேசான ஒழுக்கமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதாவது ஆண்களுடைய பலசித்தங்களுக்கும் தவறுகளுக்கும் இடங்கொடுக்கும் மாதிரியில் ஆண்களுக்கு ஒழுக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதை அறிவுள்ள மனிதன் சற்று சிந்தித்தால் தன் அழிவுக்குத் தானே விதை விதைத்திருப்பதை உணரலாம். எந்த சமூகத்தில் பெண்களை ஆண்கள் கையில் அகப்பட்ட பொம்மைகளாக்க முயல்கின்றார்களோ அந்த சமூகத்தில் குழந்தை மணமும், கோஷா முறை தவிர்க்க முடியாது. இவைகளுடன் மட்டும் இல்லாது அந்த சமூகத்தில் விபசாரம் அதிகம் உண்டாக வசதி ஏற்படுகிறது.

எங்செங்கே பெண்கள் பொருளாதார சுதந்திர மற்றவர்களாய் இருக்கிறார்களோ அங்கெல்லாம் நன்மை என்பது ஆண்களை அடைகிறது. பழங்காலங்களிலும் சரி நாகரிகமடைந்துள்ள தற்காலஙகளிலும் சரி "நன்மை" என்பதின் சரித்திரம் ஆண்களின் சொந்த சொத்தாகவே இருந்து வருகிறது. பெண்கள் ஆண்களின் சுய நலச்சகடைகளால் மிகவும் வன்மையாக அழுத்தப்பட்டிருந்தார்கள். அதாவது பெண்களுக்கு ஒரு கொடுமையான நீதியும் ஆண்களுக்கு ஒரு லேசான நீதியுமாக இருந்தது. பெண்களை பயமுறுத்த அனேகவிதமான உபாயங்கள் உபயோகிக்கப் பட்டன. அனேக சூதுகள் செய்து பெண்கள் கீழ்படிந்திருக்க வேண்டும் என்பதை நிலைக்கச் செய்தார்கள். நாகரிகத்தின் வளர்ச்சி அதிகப்பட அதிகப்பட வர்க்கப் பிரிவுகள் கூர்மையாயின. பொருளாதார சமூகப் போராட்டம் அதிகப்பட ஆரம்பித்த உடனே பெண்கள் வியாபாரம் அதிகப்பட்டது ஆரம்ப காலத்தில் ஒரு சமூகத்தில் உள்ள ஒரு பெண்ணின் நன்மை மற்ற எல்லாருடையதாகவும், எல்லாருடைய நன்மை ஒரு பெண்ணுடையதாகவும் இருந்தது. ஆனால் தனி உடமை ஆசையும் தனிச் சுதந்திர போட்டியும் வளர ஆரம்பித்த உடன் தனித்தவர்களின் (ஆண்கள்) விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்ளத்தூண்டியது. ஒரு தனித்த (பெண்ணின்) குழுவினரின் பொது நன்மைகள் மறைய ஆரம்பித்தது. இந்த தனி உடமையினால் மனிதன் தன்னிடம் உள்ள எல்லாம் தனது சேமிப்பு என்று பொறாமையுடன் நடந்து கொண்டதின் பயன் பெண்களின் தனியுடமை ஆசை மறுக்கப் பட்டது. அப்படி பெண்கள் தங்கள் நன்மைக்கும், பாதுகாப்பிற்கும் தனி உடமையை அடைய வேலைசெய்ய முன் வந்தால் சமூகத்தாரால் வெறுக்கும்படி செய்யப்பட்டார்கள். இந்த அபிப்பிராயங்கள்

பொது உடமை தேசத்தின் புதுமை.

மாஸ்கோ நகரத்தில் மிகமிக உயரமான மாளிகையொன்று கட்டப்படுகிறது. இக்கட்டிடத்துக்கு இவ்வருடம் 40-லட்சம் பவுன்கள் செலவிடப் போகிறார்கள்!

'சோவியத் மாளிகை' என்று இக்கட்டிடத்துக்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

தற்போது நியூயார்க் நகரத்தில் வானளாவ ஓர் கட்டிடம் இருக்கின்றது. இன்றைய உலகில் இதுதான் மிக உயரமானது. இதை விட 23-அடி உயரமாக 'சோவியத் மாளிகை' இருக்கும். ஆகையால் இது தான் உலகத்திலேயே பெரிய கட்டிடம். வானத்தை அளாவிநிற்கும்.

கட்டிடத்தின் கோபுரம் உருக்கு, கான்கிரீட், கண்ணாடி முதலியவற்றால் கட்டப்பெறும். தொழிலாளர் ருஷ்யா என்பதைக் குறிப்பதற்காக இச்சின்னங்கள் அறிகுறியாய் நிற்கும். லெனினுடைய பிரமாண்டமான ஓர் உருவச்சிலையைச் சமைத்து இதன்பேரில் வைப்பார்கள். சிலையின் பிரமாண்டமான நிழல் சமீபத்திலுள்ள கிரெம்லின்முழுதிலும் விழுந்துகொண்டிருக்கும். இந்த கிரெம்லின் என்ற இடத்திலிருந்து தான் ருஷ்யநாட்டு 'சார்' மன்னர்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் அரசுபுரிந்து வந்தனர்.

1942-ம் வருடத்தில் இக்கட்டிட வேலை பூர்த்தியாகி விடுமென ருஷ்ய சர்க்கார் கருதுகின்றனர். அப்போது ருஷ்யாவில் 'போல்ஷவிக' ஆட்சி ஸ்தாபிதமாகி சரியாக 25-ஆண்டுகளும் நிறையும். எனவே வெள்ளி விழாவின்போது இந்நூதன மாளிகையும் இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

1942ம் வருடத்தில் முடிகிறதென்று வைத்துக்கொண்டால், இக்கட்டிடம் கட்டும் யோசனை தோன்றி சரியாக முடிவதற்கு 19-ஆண்டுகளாகின்றன.

தான் பெண்களை குடும்பத் தாய்களாக அடுப்பங்கரைத் தலைவிகளாக ஆக்கிவிட்டது. அப்படி ஆக்கப்பட்டது பெண்கள் குடும்ப வேலைகளை அதிகம் அறிந்தவர்கள் என்பதற்காக அல்ல. பின் ஏன் என்றால் அவர்கள் இன (ஆண், பெண்) வித்தியாசமில்லாமல் கீழ்ப்படியவேண்டும் என்பதற்காகத்தான். இங்கேயும் பெண்ணின் சொந்த அபிப்பிராயங்களுக்கு இடங்கொடுக்கப் படவில்லை.

(தொடரும்.)

6000 பேர் இருக்க வசதி

கிரெமலின் நகரத்தில் மிகஉயரமான கோபுரங்களும் ஸ்தூபிகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சமீபத்தில் நாட்டப்போகும் இரும்பு ஸ்தம்பம், சின்ன குச்சிகளைப்போல ஆக்கிவிடும்! அருமையான சிறந்த வேலைப்பாட்டுடன் கூடிய அழகிய கட்டிடம் இவ்வளவு உயரத்துக்குக் கட்டப்படும்.

உலகத்திற் சிறந்த எஞ்சினீயர்கள் பலர் கட்டிடத்தின் அமைப்பில் கவனம் செலுத்திக் கொண்டிருக்க ஒலி விஷயத்தில் உலகத்து மேதாவிகளாக யிருக்கும் சிலர், இரண்டு பெரிய மண்டபங்களின் அமைப்பைக் கவனிக்கின்றனர். இந்த இரண்டு மண்டபங்களில் ஒன்றி6 00-பேர் உட்காருவதற்கு வசதியிருக்கும். ஐரோப்பாவிலேயே இதைப்போல எதுவும் இருக்காது.

கோபுரத்தின் எழில்

பெரிய மண்டபம் இருக்கின்ற கோபுரம் வட்டமானது. அதன் விஸ்தீரணம் 2 எக்கர். தரைக்குமேல் அடுக்கு அடுக்காய் 30 அடுக்கு அறைகள் இருக்கின்றன. மேல் அடுக்கின் அறையில் நின்றுகொண்டிருந்தால் ஏதோ வானத்தில் நின்றிருப்பது போலவே யிருக்கும்.

20,000பேர்களுக்கு இடம் கொடுக்கின்றார்போல உள்ள 'கிராண்ட் ஹால்' நினைத்துப்பார்க்க முடியாத அளவில் பெரிது. இதில்தான் பொதுஜனக்கூட்டங்கள், காட்சிகள், ஊர்வலங்கள், உடற்பயிற்சி அணி வகுப்புகள் உடற்பயிற்சி போட்டிகள் நடைபெறும்.

இரண்டுஎக்கர் முழுதும் ஆசனங்கள் போடப்பட்டிருந்த போதிலும் வேண்டும் போது அடுக்கடுக்காகக் கீழே உள்ள பள்ளத்தில் இறக்கி விட்டு விடுகின்றாற் போல, ஹாலின் நடுவில் விசை இருக்கும். ஒன்றின் மேலொன்றாய் 8-பிளாட்பாரங்கள் இருக்கும். எதுவேண்டுமோ அதை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவைகளை உள்ளே சுருக்கிக் கீழே யிறக்கி விடலாம். சிரமமே கிடையாது. ஒரு விசையைத் தட்டினால் அத்தனையும் கீழேபோகும் மேலே வரும்!

பிளாட் பாரங்கள் சுழலுகின்றாற்போலவும் அமைக்கப்படும். சர்க்கஸ் கொட்டகை, நீந்துவதற்குக் குளம், சினிமாக்கொட்டகை, தொழிற் காட்சிசாலைகளும் இருக்கும். ஒரே ஒலி இயந்திரத்தை வைத்துக் கொண்டு நான்கு பிளாட் பாரங்களில் சினிமாப்படம் ஓடும்படியாகவும் அமைக்கப்படுகிறது.

328 அடி உயரம்.

கட்டிடம் 328அடி உயரமாகும். 15 மைல் தூரத்துக்குள் எந்தப் பக்கத்தில் நின்று பார்த்தாலும் தெரியும். நியூயார்க் நகரில் 'விடுதலை

யின் சிலை' என்பதுதான் இன்றைக்கு உலகத்தில் பெரிது. இச்சிலையின் தலையுருவத்தைவிட இங்கிருக்கும் லெனின் தலை மூன்று மடங்கு பெரியதாயிருக்கும். லெனின் சிலையில் மனிதனுடைய தைரியம், வீரம் யாவும் விளங்கும். கால் பாதங்கள் அகலமாக வைக்கப்பட்டு ஊன்றியிருக்கும் கைகள் இரண்டும் விரிக்கப்பட்டிருக்கும். ஒரு விரல், மேல்நாடுகளை நோக்கி 'ஜாக்கிரதை' என்பது போல் காட்டிக் கொண்டிருப்பது போலிருக்கும்!

இந்த ஆள்காட்டி விரல் 16½அடி நீளமாகும். கைமட்டும் 99 அடி நீளம். தலைக்குமேலே உயர்த்தியுள்ள ஒரு கை, நியூயார்க் நகர சிலைக்குமேலே 10 அடி உயரத்திலிருக்கும்!

இந்த பூதம்போன்ற லெனினுடைய சிலைக்குக் கீழே, தண்ணீரில் ஒரு கல்லைப்போட்டால் ஏற்படும் வட்டங்களைப்போல, ஒன்றைவிட மற்றொன்று பெரிதாய் 13 வட்டமான கட்டிடங்கள் இருக்கும்.

அடி மண்டபம் 20-ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. இதில் கமிட்டி அறைகள் இருக்கும்.

போக்கு வரவு.

இக்கட்டிடத்துக்குள் ஒரு இடத்திலிருந்து இன்னோர் அறைக்குப் போகவோ, மற்ற இடங்களுக்குச் செல்லவோ தற்காலிக நியூ யார்க் நகர நாகரிகப்படி வசதிகள் அமைக்கப்பட்டிருக்கும். 148 விசைதூக்கிகள்(லிப்ட்) இருக்கும். விசிட்டர்கள் வந்தால் விசாரிப்பதற்கு 62 'ஆட்டோமாட்டிக்' விசைக்கருவிகள் இருக்கும்.

30,000 பேர்கள் இக்கட்டிடத்தின் 140 வாசற்படிகள் வழியாக நுழையலாம். இருபது நிமிஷத்துக்குள்ளாக மண்டபத்திலுள்ள 13வரிசைகளிலும் நிரம்பி விடலாம்.

உண்மையை அறிவதே ஓரே நோக்கமாக இருக்க வேண்டும். பகுத்தறிவுப்படி நடந்தவன் ஒருவன் காணும் உண்மையினால் அவனுக்குத் தீமையுண்டாகவே செய்யாது; பகுத்தறிவை மீறினால் நிச்சயமாகத் தீமையே உண்டாகும்.

இங்கர்சால்

மின்சார மயமான ஒரு நாடு.

1. நிலக்கரிக்கும், கல்லுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

நம்முடைய இயந்திரங்களுக்கு வேண்டிய விசையைப் பெறுவதற்காக, நாம் ஆழ்ந்த சுரங்கங்கள் தோண்டுவோம், ஆறுகளைச் செறுத்து அணைபோடுவோம், சதுப்பு நிலங்களிலிருந்து செத்த செடிகளைப் பிடுங்குவோம், மண்ணிலிருந்து எண்ணெயை இழுப்போம்.

ஆனால் இவை மட்டும் போதா.

எரிபொருளை எடுப்பதுப் பாதி வேலைதான் ஆயிற்று. ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நிலக்கரியைக் கொண்டுபோய் விட்டால் மட்டும் போதாது. அந்த நிலக்கரி அங்கு சும்மா கிடக்குமானால் என்ன பயன்? அதைச் சும்மா விடவா நாம் மண்ணுக்குள்ளிருந்து வருந்தி உழைத்து எடுத்தோம்? அது நமக்கு வேலை செய்யவேண்டுமென்றல்லவோ அதை நாம் தோண்டி எடுத்தோம். அப்படியானால், அதை எப்படி வேலை செய்விப்பது? அசைவில்லாமல் தரைமேற் கிடக்கும் ஒரு கரித்துண்டை எப்படி வேலை செய்யச் செய்வது? தண்ணீரின் விஷயம் எவ்வளவோ எளிது. தண்ணீர் பாய்ந்து கொண்டே இருக்கிறது. ஒரு சுழலும் இயந்திரம் அது பாயும் வழியில் வைத்தால் தண்ணீர் அதனைச் சுற்றுகின்றது. ஆனால் ஒரு நிலக்கரித்துண்டு கல்லைப்போல் உயிரற்று அப்படியே கிடக்கிறது.

ஆனால் கல்லுக்கும், கரிக்கும் ஒரு பெரிய வேற்றுமை இருக்கின்றது. அது மிகப்பெரிய வேற்றுமை; ஒரு நிலக்கரித் துண்டு எரியும். நிலக்கரித் துண்டை இயந்திரத்திலிட்டு எரித்து நீர் ஆவி எழுப்பலாம்.

தண்ணீர் தாரை எவ்வாறு சக்கரங்களைச் சுற்றுகின்றனவோ அதுபோலவே நீராவியுந் தொடர்ந்து போகும்போது சக்க

ரங்களைச் சுற்றும் வன்மையுடையது. ஒரு ஆவி இயந்திரத்தின் பிச்சங்குழலை அது இயக்கும்.

இதிலிருந்து நாம் என்ன அறிகின்றோம். நிலக்கரியை அகழ்ந்து எடுத்தால் மட்டும் போதாது. ஆவி இயந்திரங்கள், சக்கரங்கள் முதலியவை நிறைந்த நிலையங்களையும் அமைக்கவேண்டும். இந்நிலையங்களை எங்கே அமைக்கலாம்? ஒவ்வொரு தொழிற்சாலைக்கு ஒன்றாக அமைக்கலாம்.

அல்லது, நூறு அல்லது இருநூறு தொழிற்சாலைகளுக்கு உதவும்படியாக ஒரு தலைமை நிலையத்தை அமைக்கலாம்.

எது இலாபகரமான முறை? உங்களுடைய கருத்தென்ன?

2. ஒன்றா அல்லது நூறா?

என்னுடைய அபிப்பிராயத்தில் ஒரு ஒற்றைப் பெரிய நிலையமே நூறு சிறு சிறு நிலையங்களை விட இலாபகரமானதாகும்.

யோசித்துப்பாருங்கள்; சிறு சிறு நிலையங்களானால் நாம் அவற்றிற்கு நூறு கட்டிடங்கள் கட்டவேண்டும். பெரிய நிலையமென்றால் ஒன்று போதுமானது. சிறு நிலையங்களனால் நிலக்கரி கொண்டு சேர்க்க நூறு இரயிற்பாதைகள் வேண்டும். பெரு நிலையமென்றால் ஒரு இரயிற்பாதை போதுமானது.

சிறு நிலையங்களுக்கு நூறு சுழலுங் கருவிகள் வேண்டப்படலாம். பெருநிலையத்துக்கு ஓரே ஒரு கருவி போதுமானது. ஆனால் பின்னையது, முன்னைய ஒவ்வொன்றையும் விட நூறு பங்கு வலிமையுடையதாயிருக்க வேண்டுமென்பது உண்மையே. ஆனால் அந்தக்காரணத்தினால் அது நூறு பங்கு உருவத்திற் பெரிதாகவோ, அல்லது பளுவுடையதாகவோ இருக்கவேண்டுமென்பதில்லை. அநேக இலட்சம் குதிரை வேகங்கொண்ட மிகப்பெரிய சுழலுங்கருவி மிக சுருங்கிய இடத்தில் அடங்கும் ஒரு அறைக்குள் அதை வைக்கலாம்.

பெருநிலையத்திலே சிறுநிலையங்கள் எல்லாவற்றிலிருக்கும் வேலையாட்களின் தொகையைவிடக் குறைவான வேலையாட்களிருந்தாற் போதியதாகும். ஏனென்றால் ஒரு தொழிலாளி ஒரு பெரிய இயந்திரத்தை மேற்பார்ப்பதனாலும் அல்லது ஒரு

சிறிய இயந்திரத்தை மேற்பார்ப்பதானாலும்—எல்லாம்—அவனுக்கு ஒன்று தான்.

பெரிய இயந்திரத்தை மேற்பார்ப்பது ஒருக்கால் இலகுவாகக்கூட இருக்கும். அதிலே பழுது பார்க்கவும், எரி பொருளைச் செலுத்தவும், சாம்பல் அகற்றவும் போன்ற திருத்தங்கள் எத்தனையோ அமைக்கப்பட்டிருக்கும். சின்ன நிலையங்களிலே இம்மாதிரியான திருத்தங்கள் ஏன் அமைக்கக்கூடாது? செலவு மிகப் பிடிக்கும்.

இப்பொழுது ஒரு பெரு நிலையத்துக்கு ஒரு சிறு நிலையத்தைக் காட்டிலும் எத்தனை நன்மைகள் இருக்கின்றனவென்று விளங்குகின்றதல்லவா? ஆனால் இவைகளிளெல்லாம் சிறந்த ஒரு நன்மையை நான் விட்டு விட்டேன். அதைக்கடைசிக்கு வைத்திருக்கிறேன்.

அதென்னவென்று சொல்லுங்கள், பார்ப்போம். உங்களுக்குத் தெரியவில்லையாதலால், நானே சொல்லுகிறேன்.

சிறு நிலையங்களானால் அவற்றை நாம் எங்கே அமைக்க வேண்டும்? தொழிற்சாலைகளில் ஆனால் ஒரு பெரிய நிலையமானால் அவை எங்கு கூடுதல் இலாயகமானதோ அங்கே கட்டலாம். அப்படிப்பட்ட இடம் எது? எரியும் பொருள்கள் மிகுதியாக இருக்குமிடம்.

செத்த செடிகள் செறிந்த சதுப்பு நிலத்திலே செத்த செடி எரிக்கும் நிலையமொன்றைக் கட்டுவோம்; நிலக்கரி நிறைந்த சுரங்கத்தினருக்கே நிலக்கரி எரிக்கும் நிலையமொன்றைக் கட்டுவோம். இது வெளிப்படை. இதைப்பற்றி தர்க்கம் பண்ணுவதற்கொன்றுமில்லை. நிலக்கரியையோ, செத்த செடியையோ அது கிடைக்கிற இடத்திலேயே அதை எரித்து, மின்சாரவிசை எழுப்பி, அந்த விசையைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகள் உட்பட வேண்டிய இடங்கட்கெல்லாம் அனுப்பலாமென்றிருக்கும் போது எதற்காக நாம் அதைஇரயிலில்ஏற்றி நெடுந்தூரங்கொண்டு செல்லவேண்டும்? இப்பொழுது ஐநூறு கிலோமீட்டர் தொலைக்கெல்லாம் மின்சார விசையை அனுப்புகிற முறை நமக்குத்தெரியும்; கொஞ்சகாலத்தில் இன்னும் கூடுதல் தொலைக்கு அனுப்பு வழியையும் கற்றுக்கொள்வோம்.

3. தொழிற்சாலைகளின் ஒரு கூட்டுறவு (தொகுதி)

படங்கள் வரையப்படும் கடிதம் ஒன்றை எடுத்து, அதன் மத்தியில் ஐநூறு கிலோமீட்டர் தூரமுள்ள (ரேடியஸ்) ஒரு வட்டம் போடுங்கள். அந்த வட்டத்தின் நடுவிலே ஒரு பெருமின் சார நிலையத்தைக் கட்டினால், அதனுள்ளிருக்கும் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் அந்த நடுநிலையத்திலிருந்து மின்சார விசை அனுப்பலாம்.

அப்பொழுது என்னவாயிற்று? தொழிற்சாலைகளின் தொகுதி; அவற்றின் நடுவே மின்சார நிலையம்.

ஐந்தாண்டுத் திட்டப்படிக்கு நாம் நாற்பத்திரண்டு நடுமின் சார நிலையங்களைக் கட்டுவோம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிற்சாலைத் தொகுதிக்கு வேண்டிய மின்சாரத்தைக் கொடுக்கும்.

மிகப்பெரிய மின்சார நிலையம் நீப்பர்மேலே நீப்பி ராஸ்டிராயைச் சுற்றி அமைக்கப்படும்.

நடுவே மின்சார நிலையம். நாற்புறம் பலதொழிற்சாலைகள்- உலோக ஆலை, பீங்கான் ஆலை, கப்பற்கட்டும் ஆலை, அலுமினிய ஆலை முதலியன. மின்சார நிலயம் இவை எல்லாவற்றிற்கும் விசையனுப்புகின்றது, எல்லாவற்றிற்கும் துணையாகின்றது. அது மட்டுமல்லாமல், ஆலைகளுக்கும் ஒன்றுக்கொன்று உதவிபுரிகின்றன.

உலோக ஆலை அதனுடைய பெரு உலைகளில் வெப்ப மிகுந்த ஆவிகளை உற்பத்தி செய்கின்றது. இவைகள் அந்த உலோகத் தொழிற்சாலைக்கு பயனில்லாததால் அடுத்துள்ள சிமன், அலுமினியப், பீங்கான் முதலிய ஆலைகளுக்கு அளிக்கப் படுகின்றத்.

நம்முடைய கணக்குப்படிக்கு நீப்பிராஸ்டிராய் 1 கோடி 80 லட்சம் இயந்திரத்தொழிலாளிகளை நமக்குத் தருமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் இந்தத் துணைப்படை சும்மா இராது. இரும்பையும், எஃகையும், அலுமினியத்தையும் ஆற்றால் நாம் உருக்கச் செய்வோம். நீராவிக் கப்பல்கள் கட்டச் செய்வோம்; சிமென்டையும் பீங்கானையும் சுடச்செய் வோம், ரசாயன பொருள்களைப் படைக்கச் செய்வோம்; நிலங்

களுக்கு சாஸ்திர உரங்களை உற்பத்தி பண்ணச் செய்வோம்; நகரங்களை ஒளிரச்செய்வோம்; புன்செய்களுக்கு நீர் வார்க்கச் செய்வோம். நீர்ப்பர் மின்சாரத் தொகுதியிலே ஒவ்வொரு மனிதத் தொழிலாளியும் எழுநூறு இயந்திரத் தொழிலாளிகளின் துணையைப் பெறுவான்.

இத்தகைய கூட்டுறவுகள் ஒவ்வொரு பெருமின்சார நிலையத்தைச் சுற்றிலும் நாம் வகுப்போம்.

4. மின்சாரமயமான ஒருநாடு.

காலப்போக்கில் இந்த தொகுதிகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பெரிய மின்சார அமைப்பு ஏற்படுத்துவோம்.

முதலாவதாக, நீப்பிராஸ்டிராயிலிருந்து டான்பேஸின் வரைக்கு கம்பிகள் மாட்டுவோம். இவ்விரு பிரதேசங்களும் நட்புரிமையால் ஒன்றோடொன்று கைகோர்க்கும்.

நீப்பிராஸ்டிராய்க்கு மின்சாரம் வேண்டும்பொழுது டான்பேஸின் கொடுக்கும். டான்பேஸினுக்கு முடைவந்தால் நீப்பிராஸ்டிராய் உடுக்கையிழந்தவன் கைபோல விந்து உதவும். இது ஆண்டுதோறுமே நடைபெறும்.

இளவேனிற் காலத்திலே ஆறுகள் பெருக்கெடுத்துப்பாயும் போது, பூமியினடியில் நீர் ஊற்றெடுக்கின்றது. உடனே சுரங்கங்களிலும் நீர் புகத்தொடங்குகின்றது. அப்பொழுது இரவு பகலில்லாமல் மின்சாரப்பம்புகள் நீரை வெளியே இறைத்துக் கொண்டே இருக்கவேண்டும். பம்புகள் சிறிது நேரமும் நிற்பதானால் உடனே நாசந்தான். அப்படியானால் டான்பேஸினுக்கு எவ்வளவு மின்சார விசை இருந்த போதிலும் அது அழிவடையாமல் உயிரோடிருக்க வேண்டுமானால் அவ்வளவு விசையும் போதாதென்றிருப்பதில் என்ன வியப்பிருக்கின்றது? ஆனால் அதே காலத்தில் நீப்பர் நதியில் இருகரையுந்தொட்டு வெள்ளம் பாய்கின்றது; ஒழுங்குமிக விரைவாக இருக்கின்றது; சக்கரங்களெல்லாம் சுழல்கின்றன. மட்டற்ற மின்சார விசையும் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, நீப்பிராஸ்டிராய் மின்சார நிலையம் டான்பேஸினிலிருக்கும் பம்புகள் விடாது வேலை செய்வதற்கு வேண்டிய மின்சாரத்தை அனுப்பி அதற்கு உதவி புரிகின்றது.

ஆனால் ஆற்றுப்பெருக்கு அற்று, உருளைகளின் சுழற்சி வேகம் குறைந்து, நீப்பரிலுள்ள தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் போதிய அளவு இல்லாது போகையிலே நீப்பிராஸ்டிராய் டாண்பேஸினுக்கு சைகை செய்கின்றது.

உதவி!

உடனே கம்பிகள் வழி மின்சாரம் எதிர்த்துப்பாய்கின்றது டாண்பேஸினிலிருந்து நீப்பர் தொழிற்சாலைகட்கு ஏனெனில் டாண்பேஸினிலுள்ள மின்சார நிலையங்கள் நிலக்கரியை எதிர் பார்த்து நிற்கின்றன.

ஆனால் இவையெல்லாம் இப்பொழுதுதான் தொடங்கப் பட்டிருக்கும் முயற்சிகளே. ஒரு காலத்தில் நாட்டுப்புறம் முழுதுமே மின்சார மயமாகும். அந்தக்காலமும் வரும். நகரங்களில் இப்பொழுது மின்சாரத்துக்கும், மண்ணெண்ணெய்க்கும் நிகழ்ந்த போரில் மின்சாரம் வெற்றி யடைந்து விட்டது; இனி நாட்டுப் புறங்களில் வரவேண்டும். வெப்பம், புகை, கரி ஒன்றுமில்லாது பளிச்சென்ற ஒளியோடு பல்லாயிர விளக்குகள் நாட்டுப்புறத் தின் ஒவ்வொரு சந்திலும், பொந்திலும் மின்னும். குளிர்காலத் தில் கதிரவன் ஒளியில்லாமல் வருந்தி வீண் போக்கிய காலமெல் லாம் போய் மேல் மின்சார விளக்கால் பயன்படும் பொழுது களாகும். உழைப்பாளிகட்கு வேலை செய்யவும், படிக்கவும் முன்னிலும் மிகுந்த நேரம் கிடைக்கும்.

அதுவுமன்றி, இன்னும் பதினைந்தல்லது, இருபது ஆண்டு களுக்குள் மின்சாரமென்பது காற்றைப் போலும், நீரைப்போ லும், அவ்வளவு சாதாரணமாகி விடும். எங்கு வேண்டுமாயினும் எவ்வளவு வேண்டுமாயினும் விசையும்ஒலியும்வரையில்லாது கிடைக்கும். மின்சார இயந்திரங்கள் கைத்தொழிற் சாலைகளிலும், கழனிகளிலும் ஒருங்கே உழைக்கும். மின்சார ரயில்வண்டிகள் இருப்புப் பாதைகள் வழி மின்னெனப்பாயும் மின்சாரக்கலப்பை கள் பண்ணைகளை உழும், மின்சார அரிவாட்கள் அறுவடை காலத்தில் பயிரை அறுக்கும், மின்சார மோட்டார் வண்டிகள் தொழிலாளிகளைத் தொழில் செய்புமிடத்துக்குத் தூக்கிச் செல்லும்.

எங்கும்—தெருவிலும், திண்ணையிலும், ஆலையிலும், வய லிலும்—சந்தடி செய்யாது சொல்வதற்கு முன்னாக, வன்மை மிகுந்த மின்சார வேலையாட்கள் மனிதர்கட்காக வேலை செய்வார்கள்.

மனு நீதி விளக்கம்

இன்றைய பார்ப்பன புரோகித ஆட்சி திராவிட மக்களுக்குள் - தமிழர்களுக்குள் இந்தியையும், வார்தா கல்வித்திட்டத்தையும் கட்டாயமாகப் புகுத்துவதற்கு காரணம் வருணாச்சிரம ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு என்று தோழர் ஈ. வெ. ராமசாமிப்பெரியார் பலதடவை அநேக மேற்கோள்களுடன் சொல்லி வருகிறார். இன்று அதை மெய்ப்பிக்க வருணாச்கிரம தர்மம் என்பது என்ன என்பதை இந்துவேதத்தின்படி ஏற்படுத்தப்பட்ட மனுதர்ம சாஸ்திரத்தின் சுருக்கத்தை அத்தியாயம் சுலோகம் குறிப்புப்படி விளக்குகிறோம்.

இதன் முழுவிபரம் தெரியவேண்டியவர்கள் மனுதர்ம சாஸ்திரம் வாங்கிப் பார்த்துக்கொள்ளலாம். அல்லது "குடி அரசு" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்ட 'மனுநீதி விளக்கம்" என்னும் 0-2-0 புஸ்தகத்தை தருவித்துப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம்.

'பிராமணன் முதல் வருணத்தானானதாலும், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்தஇடத்தில் பிறந்ததினாலும், இந்த உலகத்தில் உண்டாயிருக்கிற சகல வருணத்தாருடைய பொருட்களையும் தானே தானம்வாங்க பிரபுவாகிறான்'

(மனு அத். 1 சு. 100)

"ஆதலால் பிராமணன் ஒருவரிடத்தில் தானம்வாங்கினாலும், தன் பொருளையே சாப்பிடுகிறான், தன் வஸ்திரத்தையே உடுத்துகிறான், தன் சொத்தையே தானம் செய்கிறான். மற்றவர்கள் அவன் தயவினாலேயே அவற்றை யனுபவிக்கிறார்கள்"

(மனு அத். 1 சு. 101)

"பார்ப்பனர் மாத்திரம் இந்த மனு சாஸ்திரத்தைப் படிக்கலாம். மற்ற வருணத்தாருக்கு ஓதுவிக்கக்கூடாது"

(மனு அத். 1 சு. 103)

"பழமையான தேச ஒழுக்கத்தையும், குல ஒழுக்கத்தையும் மனுப்பிரஜாபதியானவர் இந்த சாஸ்திரத்தில் வரிசையாகச் சொல்லியிருக்கிறார்"

(மனு அத். 1 சு. 118)

"மனுப்பிரஜாபதியால் எந்த வருணத்தாருக்கு எந்ததருமம் விதிக்கப்பட்டதோ, அதுவேத சம்மதமேயாம். அவர் வேதங்களின் கருத்துகள் நன்றாக உணர்ந்தவரல்லவா"

(மனு அத். 2 சு. 7)

நாஸ்திகன்

"வேதத்தைச்சுருதி என்றும், மனு தரும சாஸ்திரத்தை ஸ்மிருதி என்றும் அறியத்தக்கது. அவ்விரண்டையும் தர்க்க யுக்தியைக் கொண்டு மறுப்பவன் நாஸ்திகனாவான்"

(மனு அத். 2 சு. 10)

'அத்தகைய நாஸ்திகனை நல்லோர்கள் புறக்கணிக்கக் கடவர் ஏனெனில் இத்தகைய நாஸ்திகன் வேதத்தை நிந்தித்தால் தெய்வத்தை நிந்தித்தவனாகிறான்"

(மனு அத். 2 சு. 11)

"எவனுக்குக் கருப்பதான முதல்அந்தியேஷ்ட ஸம்ஸ்காரம் வரையில் மந்திர பூர்வமாகக் கருமங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தத் துவிஜன் (பிராமணன்) இந்த நூலை ஓத அதிகாரியானவன். மற்ற ஜாதியான் அதிகாரியன்று"

(மனு அத். 2 சு. 16)

"இப்படிப்பட்ட புண்ணிய தேசங்களை துவிஜர்கள் (பிராமணர்கள்) வேறு தேசத்தில் பிறந்தவர்களாயினும் வந்தடைய வேண்டியது, அல்லது சூத்திரன்(அடிமை) ஊழியத் தொழிலைத் தவிர வேறு தொழிலைச் செய்யத் தகுதியற்ற தேசம் யாதோ அந்த இடமும் வசித்தற்குரியதாம்"

(மனு அத் 2. சு. 24)

"பிராமணனுக்கு மேன்மையையும், க்ஷத்திரியனுக்குப் பலத்தையும், வைசியனுக்குப்பொருளையும், சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற பெயரை இடவேண்டும். மேற்குறித்த பெயர்களை காட்டுகின்ற பெயர்கள்".

(மனு அத், 2 சு 31)

"பிராமணனுக்கு "சர்மா" என்றும், க்ஷத்திரியனுக்கு "வர்மா" என்றும், வைசியனுக்குப் "பூதி" என்றும், சூத்திரனுக்கு "தாஸன்" என்றும் தொடர் பெயராக இடவேண்டியது".

(மனு அத். 2 சு. 32)

"சூத்திரன் தன் குலத்தில் மட்டும்; வைசியன் தன் குலத்தி லும், சூத்திர குலத்திலும்; க்ஷத்திரியன் தன்குலத்திலும் வைசிய குலத்திலும் சூத்திரகுலத்திலும்; பிராமணனுக்கு தன்குலத்திலும் மற்ற மூன்று குலத்திலும் விவாகம் செய்து கொள்ளலாம்"

[மனு அத். 3 சு. 13]

"பிராமணரின் பிதிர்க்களுக்குச் சோம்பர்என்றும், க்ஷத்திரி யரின் பிதிர்க்களுக்கு ஹவிர்புக்குகள் என்றும், வைசியரின் பிதிர்க்களுக்கு ஆஜ்யபர் என்றும் சூத்திரரின் பிதிர்க்களுக்கு சுகாலிகள் [வசிட்ட புத்திரர்கள்—விஸ்வாமித்திரர் சாபத்தால் நரகமடைந்தோர்] என்றும் பெயர்" இதனோடு மனு அத். 12 சுலோகம் 71ல் பார்க்கவும்.

[மனு அத். 3 சு. 197]

"வடை முதலிய பலகாரங்கள், பாயசம், கிழங்குகள், உரு சியுள்ள இறைச்சி, நறுமணமுள்ள நீர் இவைகள் பிராமணர்களுக் குரியன"

[மனு அத். 3 சு. 227]

"பன்றி முகருவதினாலும், கோழியின் சிறகு காற்றுப் படு வதனாலும், நாய் பார்த்தலினாலும், சூத்திரன் தொடுவதனா லும் பதார்த்தம் (உணவுப்பொருள்) அசுத்தமாகிறது".

(மனு அத் 3 சு. 251

சிரார்த்தம்

"நொண்டி, ஒற்றைக்கண்ணன், சூத்திரன், இவர்களைச் சிரார்த்தத்தன்று வீட்டைவிட்டு வெளிப்படுத்தவேண்டும்".

(மனு அத் 3 சு. 242)

"ஆமை, மச்சம் (மீன்) இவைகளின் இறைச்சியால் சிரார்த் தஞ்செய்தால் இரண்டு மாதம்வரையிலும், அரிணமென்னும் மானின் இறைச்சியால் செய்தால் மூன்று மாதங்கள் வரையிலும், செம்மறி ஆட்டின் இறைச்சியால் செய்தால் நான்கு மாதங்கள் வரையிலும், பறவைகளின் இறைச்சியால் செய்தால் ஐந்துமாதங் கள் வரையிலும் திருப்தியடைகிறார்கள்".

(மனு அத் 3 சு. 268)

"வெள்ளாட்டின் இறைச்சியால் ஆறு மாதங்களும், புள்ளி மான் மாமிசத்தால் ஏழு மாதங்களும், கறுப்புமான் (கிருஷ்ணா

மிருகம் அல்லது கவரிமான்) மாமிசத்தால் எட்டுமாதங்களும், கலைமான் மாமிசத்தால் ஒன்பது மாதங்களும் திருப்தியடைகிறார்கள்".

(மனு அத் 3 சு. 269)

"முள்ளம் பன்றி, காட்டெருமைக்கடா இவைகளின் மாமிசத்தால் பத்துமாதங்கள் வரையிலும், முயல், ஆமை இவைகளின் மாமிசத்தால் பதினொரு மாதங்கள் வரையிலும் திருப்தியடைகிறார்கள்".

(மனு அத். 3 சு. 270)

"கிழ வெள்ளாட்டின்மாமிசத்தால் பன்னிரண்டு வருடங்கள் வரையிலும், பிதிர்க்கள் திருப்தியடைகிறார்கள். அவ்வக்காலங்களில் உண்டான கறியமுது, முள்ளுள்ள வாளை மீன், கட்க மிருகம், சிவந்த ஆடு (செம்மறி ஆடு) இவைகளின் மாமிஷங்களால் சிரார்த்தஞ்செய்தால் அளவற்ற காலம் பிதிர்க்கள் திருப்தியடைகிறார்கள்".

(மனு அத். 3 சு. 271)

"சூத்திரன் இராஜாவாயிருக்கும் இராஜியத்திலும், தருமமறியாதவர்கள், பாஷண்டிகள், இவர்கள் வசிக்குங் கிராமத்திலும், சமீபத்தில் சண்டாளர் வசிக்குங் கிராமத்திலும் வாசஞ் செய்யலாகாது".

(மனு அத். 4 சு. 61)

கொடுக்கக் கூடாதவை

"சூத்திரனுக்கு இம்மைக்குப்பயனளிக்கிற அர்த்தசாஸ்திரத்தைச் சொல்லி வைக்கலாகாது. சூத்திரனுக்கு உச்சிட்ட அன்னத்தையும் கொடுக்கலாகாது. ஓமம்பண்ணிய சேஷத்தையம் சூத்திரனுக்குக் கொடுக்கலாகாது. தருமம், விரதம் இவைகளையும் அவனுக்குச் சொல்லலாகாது"

(மனு அத். 4. சு. 80)

"எந்தப் பிராமணன் சூத்திரனுக்கு நேராகத் தருமத்தையும், விரதத்தையும் உபதேசிக்கிறானோ, அவன் அந்தச் சூத்திரனோடு கூட அஸம்விருத (ஓர்விதநரகம்) மென்னும் இருளில் மூழ்கிறான்".

(மனு அத். 4. சு. 81)

"க்ஷத்திரிய வம்சத்திற் பிறவாத அரசன், கசாய்க்காரன்,

திலமர்த்தனஞ் செய்பவன் (செக்கான்), கள்விற்பவன், வேசைச் தொழில் செய்பவன் இவர்களிடத்தில் தானம் வாங்கலாகாது."

(மனு அத். 4 சு. 84)

"திலமர்த்தனஞ் செய்பவன் (செக்கான்) பத்துக் கசாயிக் காரர்களுக் கொப்பாவான். அவனைக்காட்டிலும் பத்துப்பங்க திகம்கள்ளு விற்பவன். அவனைவிட வேசைத்தொழில் செய்ப வன்பத்துப்பங்கதிகமாவான். அவனிற் பத்துப் பங்கதிகம்(க்ஷத் திரியனல்லாத) அரசன்."

(மனு அத். 4. சு. 85)

"(சூத்திர) அரசன் பதினாயிரங் கசாயிக்காரர்களுக்குச் சரி யானவனாதலால் அவனிடத்தில் தானம் வாங்குவது மிகவும் கொடுமையானது."

(மனு அத். 4 சு. 86)

"சூத்திரன் அருகிலிருக்கும் போது வேதம் ஓதலாகாது".

(மனு அத். 4 சு. 99)

"பிராமணன் தற்காலத்தில் இளைத்திருந்தாலும்,அவர்களை யொருபோதும் அவமானஞ் செய்யலாகாது".

(மனு அத். 4 சு. 135)

"பிராமணன் தன்னை அவமானஞ் செய்தவனைச் சமயம் பார்த்து நாசம் பண்ணிப்போடுவான். ஆதலால் புத்தியுள்ளவன் அவர்களை அவமானஞ் செய்யக்கூடாது."

(மனு அத்.சு. 136)

பிராமணன் மாமிசம் புசிக்கலாம்.

"ஒரு பிராமணன் தன்னை மாமிசம் புசிக்கவேணுமென்று கேட்டுக் கொள்ளும்போதும், விதிப்படி சிரார்த்தத்தில் வரிக்கப் பட்டபோதும் வேறே ஆகாரமில்லாமல் உயிர் போகும்படி நேரிட்ட சமயத்திலும் மந்திரத்தினாற் கொல்லப்பட்ட மிருகாதி களின் மாமிசத்தைப் புசிக்கலாம்."

(மனு அத். 5 சு. 27)

"ஏனென்றால் பிரம்மன் இவ்வுலக முழுவதும் ஜீவனுக் காகாரமாக உண்டுபண்ணினார். ஆகையால் நெல் முதலிய

தாவரமும், மிருகம் முதலிய ஜங்கமும் ஜீவனுக்கு ஆகாரமாகவே இருக்கின்றன."

(மனு அத். 5 சு. 28)

"ஆதலால் புசிக்கத் தக்க பிராணிகளை நாள்தோறும் புசித்தபோதிலும் தோஷத்தை யடையமாட்டான். பிரம்மனாலேயே புசிக்கத் தக்கவைகளும், கொல்லத்தக்கவைகளும் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறதல்லவா."

(மனு அத். 5 சு. 30)

"மாமிசம் கிறயத்திற்கு வாங்கினாலும் தானாகவே சம்பாதித்தாலும் ஒருவன் இஷ்டமாகக் கொடுத்தாலும் அவைகளைத் தேவர்களுக்கும் நிவேதித்துப் புசிக்கிறவன் தூஷிக்கப்படமாட்டான்."

(மனு அத். 5 சு. 32)

"சிரார்த்தத்தில் விதிப்படி வரிக்கப்பட்ட பிராமணன் மாமிசத்தைத் தோஷமென்று நினைத்து புசியாவிட்டால் அவன் இருபத்தொரு ஜனனம் பசுவாகப்பிறப்பான்"

(மனு அத். 5 சு. 35)

"எக்கியத்திற்காகவே பசுக்கள் பிரம்மனால் படைக்கப்பட்டிருக்கின்றன. அந்த எக்கியஞ்செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தையடைகின்றது. ஆகையால் எக்கியத்திற்செய்யும் உயிர்க்கொலை கொலையாகமாட்டா."

(மனு அத். 5 சு. 39)

"கொடிகள், பசுக்கள், விருக்ஷங்கள், மிருகங்கள், பக்ஷிகள் இவைகளை எக்கியத்திற்கு உபயோகப்படுத்தினால் பின்பு அவை உயர்ந்த கதியை யடைகின்றன"

(மனு அத். 5 சு. 40)

வேத ஹிம்சை

"வேதம் ஹிம்சையைச் சொன்னபோதிலும் அதுபுண்ணியமாகவேயிருக்கும்."

[மனு அத். 5 சு. 44]

"பத்துநாள் தீட்டு பிராமணனுக்கும், அப்படிக்கொத்த க்ஷத்திரியனுக்கு பன்னிரண்டு நாளும், வைசியனுக்குப் பதினைந்து நாட்களும், சூத்திரனுக்கு முப்பது நாட்களும் தீட்டு இருக்க வேண்டியது."

(மனு அத். 5 சு. 83)

"சூத்திரன் இறந்துபோனால் ஊருக்குத் தெற்குப் பக்கத்திலும், வைசியன் இறந்துபோனால் மேற்குப் பக்கத்திலும், க்ஷத்திரியன் இறந்துபோனால் வடக்குப்பக்கத்திலும் பிராமணன் இறந்துபோனால் கிழக்குப் பக்கத்திலும் எடுத்துக் கொண்டு போகவேண்டியது."

[மனு அத். 5 சு. 92]

'அரசன் தண்டனை செய்யாவிடில்உலகத்தார் ஜாதிமரியாதை நீக்கி நடப்பார்கள்'

[மனு அத். 7 சு. 24]

வேத ஸ்மிருதி முறைப்படிக்கு ராஜ்ய பரிபாலனம் செய்யாமலிருக்கிற அரசனை அந்தக் தண்டத்தைக்கொண்டே மந்திரி முதலானவர்கள் கொன்று விடலாம்'

[மனு அத் 7 சு. 26]

'பிராமண குலத்தில் பிறந்தவன் கர்மானுஷ்டானமில்லாதவனாயினும், அரசன் செய்யவேண்டிய தீர்மானங்களைச் செய்யலாம். சூத்திரன் ஒரு பொழுதும் தீர்மானஞ் செய் லாகாது.'

(மனு அத், 8 சு. 20)

'எந்த தேசத்தில் சூத்திரன்; அரசன் செய்யவேண்டிய தரும விசாரணையைச் செய்கின்றானோ, அந்த தேசமானது சேற்றிலகப்பட்ட பசுவைப்போல மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே துன்பத்தில் ஆழ்ந்துவிடுகின்றது.'

(மனு அத். 8 சு. 21)

"யாதொரு தேசமானது சூத்திரர், தெய்வ நிந்தனைசெய்வோர், இவர்கள் நிறைந்தும் பிராமணர்களில்லாமலும் இருக்கின்றதோ அந்த தேசமுழுதும் வறுமை, பிணி இவைகளால் துன்புறுத்தப்பட்டு சீக்கிரத்தில் அழிந்து போய் விடும்".

(மனு அத். 8. சு. 22)

'பிராமணனைச் சொல் என்றும்; க்ஷத்திரியனை உண்மையைச்சொல் என்றும், வைசியனை நீ பொய் சொன்னால் உன்னுடைய பசுவும், விதையும் பலியாது அழியுமென்றும், சூத்திரனை நீ பொய் சொன்னால்மறையோனைக் கொன்றது முதலிய பாவங்களை அடைவா என்றும் சத்தியம் கேட்க வேண்டியது.'

(மனு அத். 8 சு. 88)

'ஸ்திரீகளின் புணர்ச்சி விஷயத்திலும், விவாஹ விஷயத்திலும், பசுமாடுகள் புல் விஷயத்திலும், பிராமணரைக் காப்பாற்

றும் விஷயத்திலும் பொய் சொன்னால் குற்றமில்லை.'

(மனு அத். 8 சு. 112)

பிரமாணம்

'பிரமாணம் செய்கிற சூத்திரனை, நெருப்பில் பழுக்கக் காய்ச்சின மழுவாகிலும் எடுக்கச்செய்யவேண்டும். அல்லது தண்ணீரில் அமிழ்த்தவேண்டும். அவன் பிள்ளை, மனையாள் இவர்களின் தலையில்லாவது அடிக்கவேண்டும்.'

(மனு அத் 8 சு. 114)

'மழுவெடுத்த சூத்திரனுக்குக்கை வேகாமலும், தண்ணீரில் அமிழ்த்தப்பட்ட சூத்திரன் மிதக்காமலும், சாகாமலும், பிள்ளை மனையாள் இவர்களின் தலையில் அடித்ததினால், யாதொரு துன்பமும் நேரிடாமலும் இருந்தால் அவன் சொல்லும் பிரமாணம் சத்தியம் என்று உணரவேண்டும்.'

(மனு அத். 8 சு 115)

"பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டுப், பிராமணரல்லாதாரைக் கொன்றவனுக்கு அதர்மம் பாவம் நேரிடாது".

[மனு அத். 8 சு 143]

"சூத்திரன் பிராமணர்களைத் திட்டினால் அவன் நாக்கை அறுக்கவேண்டும்."

(மனு அத். 8 சு. 270]

"பிராமணர்களின் பெயர் ஜாதி இவைகளைச் சொல்லித் திட்டுகிற சூத்திரன் வாயில் பத்து அங்குல நீளமுள்ள இரும்புக் கம்பியைக் காய்ச்சி எரிய எரிய வைக்க வேண்டும்."

[மனு அத். 8 சு. 271)

"பிராமணனைப் பார்த்து நீர் இதைச்செய்யவேண்டும் என்று தரும உபதேசம் செய்கிற சூத்திரன் வாயிலும் காதிலும், எண்ணையைக் காய்ச்சி ஊற்றவேண்டும்".

[மனு அத். 8 சு. 272)

"சூத்திரன் துவிஜ ஜாதிகளினது (ஆரியர்கள்) எந்தெந்த அவயவங்களைக் கையினாலேனும், தடியினாலேனும் தாக்குகின்றானோ; அவனது அந்தந்த உறுப்புகளை அறுத்தெறிய வேண்டும். அடித்தால் கையையும், உதைத்தால் காலையும் வெட்டிவிட வேண்டும்".

(மனு அத் 8 279, 280)

தண்டனை

"பிராமணனுடன் சரிசமானமாய் சூத்திரன் உட்கார்ந்தால் அவனுடைய இடுப்பில் சூடுபோட்டாவது, ஆசன பக்கத்தைச் சிறிது அறுத்தாவது ஊரைவிட்டு துரத்தவேண்டும்".

(மனு அத் 8 சு. 281)

"பிராமணனுடைய தலைமயிர், தாடி, மீசை, கால், கழுத்து, இவைகளைப் பிடிக்கிற சூத்திரனது கைகளை யோசியாமல் அறுக்கவேண்டும்".

(மனு அச். 8 ச. 283)

"பிராமணரல்லாதார் மற்ற மூன்று வருணத்தாரின் மனைவியைப்புணர்ந்தால் அவனது உயிர்போகும் வரைத்த டிக்க".

(மனு அத். 8 சு. 359)

"ஒரு கன்னிகை (மணமாகாதபெண்) உயர்ந்த ஜாதிப் புருஷனைச்சேர்ந்தால் அவளைக்கண்டிக்கப்படாது."

(மனு அத். 8 சு. 36)

"உயர்குலப் பெண்ணைப் புணர்ந்த இழி குலத்தோனை சாகும் வரையில் தண்டிக்கவேண்டும்"

(மனு அத். 8 சு. 366)

"சூத்திரன், காவலில்லாத (இஷ்டம் போல் திரிகின்ற) பிராமணப் பெண்களைப் புணர்ந்தால் பீஜம், ஆண்குறி இவைகளை அறுக்க வேண்டியது. காக்கப்பட்ட பெண்களைப் புணர்ந்தால் உடல் முழுதும் துண்டு துண்டாய் வெட்டி அவனுடைய பொருளனைத்தும்கொள்ளையிட வேண்டும்"

(மனு அத் 8 சு. 374)

பிராமணனுக்குத் தண்டனை!

'பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச்செய்தாலும் அவனைத் தூக்குப்போடவேண்டிய கொலை குற்றம் செய்தாலும் அவன் தலையை மொட்டையடித்தல் வேண்டும்; அதுவே அவனுக்குத் தூக்குத்தண்டனைக்கு ஒப்பாம். மற்ற வருணத்தாருக்குக் கொலையே தண்டனை"

(மனு அத். 8 சு. 379)

"கொடிய குற்றம் செய்தவனாயினும், பிராமணனைக் கொல்லாடலும், மற்ற எத்தகைய துன்பத்திற்கும் ஆளாக்கா

மற்றும் அவனுக்கு பொருளைக் கொடுத்து அயலூருக்கு அனுப்ப வேண்டும்."

(மனு அத் 8 சு. 380)

"அரசனானவன் பிராமணனை எத்தகைய குற்றங்களுக்கும் சொல்ல நினைக்கக்கூடாது."

(மனு அத். 8 சு. 381)

அரசன் செய்ய வேண்டியது?

"அரசன் சூத்திரனை மற்ற மூன்று வருணத்தாருக்குப் பணிவிடை செய்ய சொல்லவேண்டியது. அப்படிச் செய்யாவிடில் உலகம் அழிந்து விடுமாதலால் தண்டித்து அங்ஙனம் செய்விக்க வேண்டும்."

(மனு அத். 8 சு. 401)

"பிராமணன் கூலிகொடுத்தோ, கொடாமலோ சூத்திரனை வேலை வாங்கலாம். ஏனென்றால் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே சூத்திரன் பிரம்மனால் படைக்கப்பட்டிருக்கின்றான்".

(மனு அத் 8 சு. 413

"சூத்திரனானவன் தன் தலைவனாகிய பிராமணனால் அடிமைத் தனத்தினின்றும் நீங்கியிருந்தாலும் அவ்வடிமைத் தனம் அவனைவிட்டு நீங்காது. சூத்திரன் பிறந்த போதே அவ்வடிமைத் தனமும் அவனை விட்டுப் பிரியாதவாறு அவன் கூடவே பிறந்ததாகையால் எங்ஙனம் நீங்கக்கூடும்? அவன் மறுமைக்காகவும் பிராமணனுக்குத் தொண்டு செய்யவேண்டும்".

(மனு அத் 8 சு. 414)

"சூத்திரர் என்பவர்கள் 1 யுத்தத்தில் புறங்காட்டியோடினவர். 2யுத்தத்தில் கைதியாகப் பிடிக்கப்பட்டவர் 3 பிராமணனிடத்தில் பக்தியினால் ஊழியம் செய்கிறவர். 4 விபசாரி மக்கள் 5 விலைக்கு வாங்கப்பட்டவர் 6 ஒருவனால் கொடுக்கப்பட்டவர், 7 தலைமுறை தலைமுறையாக ஊழியம் செய்கிறவர் ஆகியவர்கள்"

(மனு அத். 8 சு- 415)

"மனையாள், பிள்ளை, வேலைக்காரன் (சூத்திரன்) இவர்கள் ஏதேனும் பொருளைச் சம்பாதித்தால் அப்பொருள் தலைவனாகிய பிராமணனுக்குச் சேரவேண்டுமேயன்றிச் சம்பாதித்தவர்களைச் சேராது."

(மனு அத். 8 சு. 416)

"பிராமணன் சந்தேகமின்றி சூத்திரன் தேடிய பொருளை கைப்பற்றலாம்; அடிமையாகிய சூத்திரன் எவ்விதப் பொருளுக்கும் உடையவனாக மாட்டான்."

(மனு அத். 8 சு. 417)

"வைசிய சூத்திரர்களுக்கு தங்கள் தங்கள் குலத்தொழிலைச் செய்யுமாறு அரசன் கட்டளையிடு; இன்றேல் உலகம் அழிந்து விடும்".

(மனு அத். 8 சு. 418.)

"பிராமணனால் சூத்திர ஸ்திரீயிடத்தில் பிள்ளை பிறந்தால் அவனுக்கு தந்தையின் சொத்துக்குப் பாத்தியமில்லை."

(மனு அத் 9 சு 155)

"பூணூல் முதலிய பிராமணச் சாதிக்குறியைத் தரிக்கிற சூத்திரனின் அங்கங்களை அரசன் வெட்டிவிட வேண்டும்."

(மனு அத். 9 சு. 224)

பட்டணத்தைத் விட்டுத் துரத்த வேண்டும்

"வேதங்களையும், ஸ்மிருதிகளையும் நிந்திப்பவன், தன் ஜாதித் தொழிலை விட்டு மற்றொரு ஜாதித்தொழிலைச் செய்பவன் ஆகியவர்களை அரசன் பட்டணத்தை விட்டுத்துரத்த வேண்டும்."

(மனு அத். 9 சு. 225)

"பிராமணன் பொருளை அபகரிக்க சூத்திரனைச் சித்திர வதை செய்து கொல்லுக; ஆனால் பிராமணன் சூத்திரனுடைய பொருளைத் தன் இஷ்டப்படி கொள்ளையிடலாம்.

(மனு அத். 9 சு. 248)

"பிராமணனைப் பகைத்துக் கொள்ளுகிறவன் அழிந்து போவான்."

(மனு அத். 9 சு. 314

"பிராமணர்கள் கோபித்தால் சுவர்க்க லோகத்தையும் வேறாக சிருஷ்டித்து விடுவார்கள். தேவர்களையும், மனிதர்களாக்கி விடுவார்கள். ஆதலால் பிராமணர்களைப் பகைக்கின்ற எவனும் க்ஷேமத்தை யடையமாட்டான்."

[மனு அத். 9 சு. 315]

பிரமணன் மூடனாயினும் அவனே மேலான தெய்வம்."

[மனு அத். 9 சு. 317]

"பிராமணர்கள் கெட்ட காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும் பூஜிக்கத்தக்கவர்களாவர்; ஏனெனில் அவர்கள் மேலானவர்களன்றோ"?

[மனு அத். 9 சு. 318]

"பிராமணனுக்குத் துன்பம்செய்கின்ற க்ஷத்திரியனை மாணஓமம் [சூன்யம்] செய்தாவது ஒடுக்கவேண்டியது; ஏனெனில் க்ஷத்திரியன் பிராமணனிடத்திலிருந்து உண்டானவனல்லவா?"

[மனு அத். 9 சு. 319]

'சூத்திரனுக்கு இம்மையிலும், மறுமையிலும் பிராமண பணிவிடை ஒன்றே பயன் தருவதாம்."

[மனு அத். 9 சு. 334]

பணி செய்து கிடத்தலே

"சூத்திரன் மனோவாக்கு காயங்களினால் பிராமணனுக்கு தொண்டு செய்ய வேண்டும், பிராமணனில்லாதவிடத்து க்ஷத்திரியனுக்கும், க்ஷத்திரியனில்லாத விடத்து வைசியனுக்கும் பணி செய்ய வேண்டும்".

[மனு அத். 9 சு. 335]

"விராத்திய [உபநயனமில்லாத] க்ஷத்திரியனுக்கு அவ்வித ஸ்திரீயிடத்தில் சல்லன் பிறக்கிறான். அவனுக்கு திராவிடன் என்று பெயர்."

[மனு அத். 10 சு. 22]

"சூத்திரன் பிராமணப் பெண்ணைச் சேர்ந்தால் அவளினின்றும் பிறக்கிற பிள்ளை சண்டாளனாவன்; அச்சண்டாளனும், மற்ற நான்கு வருணப் பெண்களையும் கூடினால் அவனைக் காட்டிலும் தாழ்ந்த ஜாதிகள் உண்டாவார்கள்".

[மனு அத். 10 சு. 30]

"திராவிட, தேசத்தை யாண்டவர்கள் அனைவரும் மேற் சொன்னபடி சூத்திராய் விட்டார்கள்".

[மனு அத் 10 சு. 44]

"சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச்செய்தாலும் பிராமணனாகமாட்டான். ஏனென்றால் அவனுக்கு பிராமணத் தொழிலில் அதிகாரமில்லையன்றோ, பிராமணன் சூத்திரத் தொழிலைச் செய்தாலும் அவன் ஜாதி உயர்ந்ததன்றோ! இப்படியே பிர்ம்ம தேவன் நிச்சயஞ் செய்திருக்கிறார்".

[மனு அத் 10 சு. 75]

"பிராமணரல்லாதான் பொருளாசையால் உயர் குலத்தோனுடைய தொழிலைச் செய்தால் அரசன் அவன் பொருள் முழுமையும் பறித்துக்கொண்டு அவனைத் துரத்திவிட வேண்டும்".

[மனு அத் 10 சு. 96]

பரிசுத்தன்

"பிராமணன் நீர், நெருப்பு இவைகளைப்போல இயற்கையிலேயே பரிசுத்தன்"

[மனு அத் 10 சு. 103]

'சூத்திரன் இம்மையில் உயிர் வாழ்க்கைக்கும், மறுமைப் பயனுக்காகவும் பிராமணனையே தொழவேண்டும். அதுவே அவனுக்குப் பாக்கியம்".

[மனு அத். 10 சு. 122]

சூத்திரனுக்கு ஜீவனோபாயம்

"பிராமணன் உண்டு மிகுந்த உணவு (எச்சில்) உடுத்திக்கிழிந்த ஆடை, சாரமற்ற தானியங்கள் (பதர்) இவைகளைப் பிராமணன் சூத்திரனுக்கு ஜீவனத்திற்காகக் கொடுக்க வேண்டும்"

[மனு அத். 10 சு. 125]

"சூத்திரன் எவ்வளவு திறமையுள்ளவனாயிருந்தாலும் பொருளைச் சேர்க்கலாகாது. சூத்திரனிடம் பொருள் சேர்ந்தால் பிராமணனுக்குத் துன்பம் வரும்".

[மனு அத் 10. சு. 129]

"அதிக பசு முதலியவற்றால் செல்வமுடையவனாயும், சோமபானம் பண்ணாதவனாயும் இருக்கிற வைசியன் வீட்டிலிருந்து கேட்டுக் கொடாவிடில் வலிமை செய்தாவது, களவு செய்தாவது வேண்டிய பொருளை பிராமணன் எடுத்துக்கொள்ளலாம்".

[மனு அத். 11 சு. 12]

கொள்ளையிட அனுமதி

"செல்வமுள்ள சூத்திரன் வீட்டிலிருந்து யதேஷ்டமாக யோசனையின்றிக் கேளாமலும் வலிமையினாற் கொள்ளையிடலாம்".

[மனு அத். 11 சு. 13]

"தருமசிந்தனையுள்ள அரசன் இவ்விதம் திருடி யாகம்செய்கிற பிராமணனை தண்டிக்கக் கூடாது. அரசனின் அறியாமையால் பிராமணன் பசித்துத் துன்பத்தை யடைகிறான்."

[மனு அத். 11 சு. 21]

"குடிக்கிற மனைவியைப் புணர்தல், பெண்களையும் பிராமணரல்லாதாரையும் கொல்லுதல், இவை எல்லாம் உபாதகம் [குறைந்த பாவம்] என்றறிக."

[மனு அத். 11 சு. 66]

"பிராமணன் அறியாமையினால் சூத்திரனைக் கொன்றுவிட்டால் ஆறுமாத காலம் விரதமிருக்கவும், அல்லது ஒரு எருதையும் பத்து வெள்ளைப் பசுக்களையும் வேதம் தெரிந்த பிராமணனுக்குக் கொடுக்க."

[மனு அத். 11 சு. 130]

"அல்லது பூனை, அணில், கோட்டான், காடை, தவளை, நாய், உடும்பு, காக்கை இவைகளில் ஒன்றைக் கொன்றால் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் யாதோ அதைச் சூத்திரனுக்கும் செய்க."

[மனு அத். 11 சு. 131]

"மேற் சொல்லியவைகளைத் தெரியாமற் கொன்றால் மூன்று நாள் பால் சாப்பிட்டுக்கொண்டு உபவாசம் இருக்க வேண்டும். அதற்கு சக்தி இல்லாவிடில் மூன்றுநாள் நாள்தோறும் ஒரு யோசனை நடக்க வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் புண்ணிய தீர்த்தத்திலேனும் மூன்று நாள் மூழுக வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் வருண மந்திரத்தையாவது மூன்று நாள் செபம் செய்ய வேண்டும்;"

[மனு அத். 11 சு. 132]

சூத்திரனுக்குத் தவம்.

"பிராமணனுக்கு வேத வேதாந்தங்களை ஓதி உணரும் ஞானமும், க்ஷத்திரியனுக்கு இந்நூலில் சொன்னபடி அரசியல் நடத்தும் ஞானமும், வைசியனுக்குப் பயிர், வர்த்தகம் இவைகளைக் குறித்த ஞானமும்: சூத்திரனுக்குப் பிராமணப் பணிவிடையும் தவமாகும்."

(மனு அத். 11 சு. 235)

தாய் தந்தையர் கட[illegible]ம.

(எஸ். கே. பி. முத்துராஜா)

நூதகப்பன் கல்விமானாயும், தனயன் மூடனாயும் இருப்பதேன்? தாய் தந்தையர் தாம் தம் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தகுந்தவாறு செய்யாததேயாகும். பிள்ளைகளின் அறிவை வளர்ப்பது ஆசிரியர்களின் கடமை என்பது அநேக பெற்றோர்களின் எண்ணம்

பிள்ளைகளின் முதல் பாடசாலை அவர்கள் வீடல்லவா! பிள்ளைகளுக்கு ஐந்தாறு வருஷங்கள்வரை அவர்கள் தேக நிலை, மனநிலை, ஒழுக்கநிலை முதலியவைகளை கற்பிப்பவர் தாய் தந்தையறன்றோ! "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது முதுமொழி அல்லவா? சிறுவர்கள் குழந்தைப்பருவத்திலிருந்து எந்த மாதிரியில் பழக்கப்படுகிறார்களோ அவர்கள் இறக்கும் வரையில் அதே பழக்கத்திலிருப்பார்கள்.

பிள்ளைகள் உலகத்தில் தோன்றும்போது ஒன்றும் அறியாத மானிடராய் உதிக்கின்றனர் அவர்களிடத்தில் முதன் முதலில் தோன்றும் குணம் விசாரணைக் குணமாம்; கண்டதெல்லாவற்றையும் எடுத்தோ, சுட்டிக் காட்டியோ அதென்ன இதென்ன என்றே கேட்பார்கள். பல பெற்றோர்கள் "ஏண்டா சும்மா இருடா" என்று சொல்லி அவர்களை பயமுறுத்தி அவர்களிடத்தில் காணப்படும் விசாரணைக் குணத்தை அடக்கி விடுகிறார்கள். இது பெற்றோர்களின் தெரியாத்தனமல்லவா? பதில் சொல்ல முடியாதவர்கள் பெற்றோராகார்.

தாய் தந்தையர் கடமை

அவர்களுடைய கேள்விக்கெல்லாம் மறுமொழி சொல்லி அவர்கள் அறிவை விருத்தி செய்வதே தாய் தந்தையரின் முதற் கடமை. பிள்ளைகள் சில மணி நேரமே பள்ளிக்குச் சென்று கல்வி கற்கின்றார்கள். அதிக காலத்தை வீட்டிலேயே செலவழிக்கிறார்கள். அது சமயம் தாய் தந்தையர் நன்மதி புகட்டினால் பிள்ளைகளின் மனம் விரிவடையும். தாய்தந்தையர் தம் கடமையைச் செய்யாது விட்டு விட்டு தம் பிள்ளை மூடனாய் இருப்பது கண்டு வருத்தப்படுவது மதியீனமல்லவா?

சிலர் "தாயைப் போல் பிள்ளை" என்று சொல்லி பிள்ளைகளின் குற்றத்தை தாய் மேல் ஏற்றுவது வழக்கமாய் இருக்கிறது. இது தப்பு. தந்தைமார்கள் தம் தொழிலில் நேரமுழுதும் செலவழித்து விட்டு பிள்ளைகளின் சரீர வளர்ச்சி, சன்மார்க்க வளர்ச்சி, மனவளர்ச்சி முதலியவைகளை கவனியாது விட்டு விடுகிறார்கள்.

கல்வியற்ற தாயால் வரும் வினை

கல்வி அறிவற்ற தாய்மார்கள் என் செய்வார்கள்? அருகிலுள்ள கெட்ட சகவாசமுள்ள பிள்ளைகளும் மற்றுமுள்ளோரும் தாம் அறிந்தவற்றை பழக்கி விடுகிறார்கள். இப்படி இருந்தால் தகப்பனைப் போல் மகன் தோன்றுவது எப்படி முடியும்? "தந்தை மகற் காற்று நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்" என்று நாயனார் புகன்றுளார்.

குழந்தைகள் இளமையிலிருந்தே நல்ல குணவான்களோடு பழகும்படி விட்டு அவர்கள் வளர வளர நன்னடக்கையான உலக விவகாரங்களில் புத்தியைச் செலுத்தும்படியும் செய்ய வேண்டும். தந்தைமார் தொழில் முயற்சிக்கு வெளியில் போய்விட தாய்மாரே வீட்டிலிருக்க நேர்வதால் ஒவ்வொரு பெண்களுக்கும் கல்வி அறிவும் நல்லொழுக்கமும் வீட்டு வேலைக்குறிய படிப்பும், மருத்துவப் படிப்பும் அவசியமானது.

கோழைகளாக்குவது யார்?

ஓர் குழந்தையின் செய்கைக்கும் பிற்கால நிலைமைக்கும், தாய் தந்தையரே பெரிதும் உத்திரவாதியாவார்கள். சில பெற்றோர்கள் இளைஞர்களை "அஞ்சுகண்ணன்" "பூச்சாண்டி" "பூதம்" என்று பலவிதமாய் பயமுறுத்தி அவர்களின் வீரத்தைப் போக்கி கோழைகளாக்குகிறார்கள். இப்படிச் செய்யாதிருத்தல் நலம். சில பெற்றோர்களும், உறவினரும் தகப்பனை போக்கிரி என்றும் தாயாரை முண்டை என்றும், அக்காளை கழுதை என்றும், அண்ணனை அடே பயலே என்றும் குழந்தைகளுக்கு சொல்லச் சொல்லி கொடுக்கிறார்கள். இந்த விளையாட்டுப் பேச்சே நாளை முதுமையிலும் வரும். இப்படி குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது அறிவற்ற செயலேயாகும்.

இப்படி போதித்து விட்டு பின் தன்னைப் போல் தன் குழந்தை வரவில்லையே என்று ஏக்கப்படுவது யார் குற்றம்? குழந்தைகளின் கேள்விக்குத் தக்கவாறு பதிலளிக்கு முறையே கல்வி கற்றுக்கொடுக்கும் முறைகளில் ஒன்றாகும். குழந்தைகள் கேட்கும் கேள்விக்குத் தக்க பதில் தெரியாவிட்டால் அவ்விஷயத்தை அறிந்த நண்பர்களிடமாவது அனுப்புவது நலம். அல்லது தாமே மேற்படி கேள்விக்குறிய புத்தகங்களைப் படித்துப் போதிக்கலாம்.

பெற்றோர்கள் பொறுப்பு

குடும்பத்தை காப்பாற்ற தொழில் செய்வது மட்டும் பெற்றோர்களின் கடமை என்று எண்ணி குழந்தைகளை தற்குறிகளாயும் துன்மார்க்கர்களாயும் செய்து விடாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பெற்றோர்களாகிய உங்களைச் சேர்ந்ததாகும். பெற்றோர் கவனியாத படிப்பும், வீட்டுப் படிப்பு இல்லாத பள்ளிப் படிப்பும் பயன்படாது. பள்ளிக்கூடம் பேரயும் பயனில்லை. வீடு தான் பெரிய போதனைகளின் பள்ளிக்கூடம். குழந்தைகளை அன்புடன் பாலூட்டி சீராட்டி பெருமையுடன் வளர்க்கப் பிரயத்தனம் செய்வதைப் போல் கல்வியையும் ஊட்டி வளர்க்க முயற்சி செய்வதுடன் கைத்தொழிலோ வியபார முறையோ பழக்கு வித்தல் நன்முறை.

கண்டிப்பது நல்லது

பள்ளிக்குச் செல்லாதிருக்கும் பிள்ளையை தகப்பனார் கண்டிக்கும்போது தாயாரோ உறவினரோ சலுகை காட்டுவதும், தாயார் கண்டிக்கும்போது தகப்பனாரோ உறவினரோ சலுகை காட்டுவதும் பிசகல்லவா? குற்றம் கண்டவிடத்து கண்டிப்பது நலம். சலுகை காட்டுவது தீமை பயக்கும். ஆனால் கண்டிப்பதிலும், தண்டிப்பதிலும் அளவு வேண்டும். "அளவுக்கு மிஞ்சினால் அறுசுவை உணவும் நஞ்சாகும்" பெற்றோர்கள் துர்பாஷை பேச அதைக் கேட்கும் குழந்தைகள் நற்பாஷை பேசுவதேது! தகப்பன் துன்மார்க்கனாய் இருப்பதையும், கள்குடித்து பிதற்றுவதையும் பார்க்கும் அவர்களின் பிள்ளைகள் கெடாமல் திருந்துவது எப்படி முடியும்? பெற்றோர்கள் திருந்தினால் தான் அவர்கள் குழந்தைகளும் திருந்த ஏதுவாகும்.

உறுப்பின் மூலம் அறிவது என்ன?

பாரசீகர் கூற்று.

பாரசீக பாஷையிலுள்ள புராதன காலத்திய கையெழுத்துப் பிரதியொன்று சமீபத்தில் ஐக்கிய மாகாணத்தில் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் பல அரிய விஷயங்கள் பொதிந்துகிடக்கின்றன. மனிதனின் அங்க அவயவங்களின் அமைப்புகளிலிருந்து அவனது முற்கால பிற்கால வாழ்க்கைகளை எடுத்துக்கூறும் முறைகள் அந்தக்கையெழுத்துப் பிரதியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவனின் அங்க அவயவங்களின் குறிப்புகளிலிருந்து அவனது குணாதிசயங்களைக் கூட அறிவிக்க முடியும்.

ஒருவனது 'இரத்தம்' ஒட்டகையின் நிறத்திற்குப் பொருத்தமாக இருந்தால் அவன் மிகவும் அதிர்ஷ்டம் கெட்டவன் என அந்த கையெழுத்துப் பிரதியின் மூலம் தெரியவருகிறது.

பேதமை

ஏதோ ஒரு சமயம் உபாத்தியாயர் பிள்ளையை அடித்து புத்தி புகட்டினால் சில பெற்றோர்கள் என் பிள்ளையை எவ்வளவோ சீராட்டி பாராட்டி வளர்க்கிறேன், எப்படி நீ அடிக்கலாம், என்று கேட்பாரும், குழந்தையை பள்ளிக்குச்செல்ல வேண்டாம் என்று கூறுவாருமுளர். ஆசிரியரைக் கடிவாருமுளர். இப்படிச் செய்வது முழுப்பேதமையேயாகும் "எவனோ ஒருவன் குளத்தினிடம் கோபித்துக்கொண்டு கால் கழுவாமல் போனானாம்" அது மாதிரியே யாகுமிது. துள்ளித்திரிகின்ற காலத்திலே என் துடுக்கடக்கி பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே! என்று பிற்காலத்தில் உங்கள் குழந்தைகள் உங்களைக் குறைகூறாதிருக்கும்படி நடந்து கொள்வதே பெற்றோர்களின் பெருங்கடன். ஆகையினால் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளை பிற்கால உலகத்தின் தேவைக்கான பிரஜைகளாக்க முற்படல் நலம்.

குறிப்பிட்ட கையெழுத்துப்பிரதி வெகு நாட்களுக்குமுன் மொகலாய மன்னர் ஒருவரின் பின் சந்ததியாருக்கு சொந்தமாக யிருப்பதாக கூறப்படுகிறது. காலவேறுபாடுகளுக்கிணங்க இச்சந்ததியார்களுக்கு அதிகமான செல்வாக்கு இல்லாதிருந்த போதிலும் பூர்வீகமான பட்டங்கள் இவர்களுக்கு இன்றும் இருந்துவருகின்றது. பாழடைந்த அரண்மனைகளில் இவர்கள் வசித்துவந்தபோதிலும் ஒவ்வொருவரிடத்திலும் புராதன கையெழுத்துப் பிரதிகள் ஏராளமாகயிருந்து வருகின்றன. அவைகளில் ஒன்றைப்பற்றித்தான் நாம் இப்பொழுது குறிப்பிடுகிறோம். புழுப்பூச்சிகள் அரித்தது போக எஞ்சியுள்ள சில பகுதிகள் மட்டிலுமே இப்புத்தகத்தில் காணபடுகின்றன. மனிதனின் குணம், இறந்தகால எதிர்கால வாழ்க்கை முதலியவைகளை பற்றி தெரிவிக்கும் பகுதிகள் தெளிவாக இருக்கின்றன. பெண்களைப்பற்றி விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இந்த நூலின் போக்கிலிருந்து அது தனிப்பட்ட ஒருவரின் உபயோகத்திற்கு எழுதி வெளியிடப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால் அந்த நூலாசியரின் பெயர் என்னவென்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை.

சரீரத்தில் தோன்றியுள்ள உரோமங்களின் அமைப்பிலிருந்தும் மனிதனின் குணாதிசயங்களை கூறிவிடலாம். அதாவது தேகத்தின் எந்த பாகத்திலாவது நான்கு உரோமங்கள் சேர்ந்தாற்போல் காணப்பட்டால் அவன் கையில் ஒருபோதும் பணமிருக்கமாட்டாது.

ரோமக்கால்கள் தடிப்பாக இருந்தால் அவன் தரித்திரனாகவும் துர்பாக்கியசாலியாகவுமிருப்பான். உரோமக்கால்கள் சிவப்பு நிறத்துடன் காணப்பட்டால் ஒருவன் ஈவு இரக்கமில்லாதவனாகவும் முரட்டுக் குணமுடையவனாகவும இருப்பான். உரோமக்கால்கள் பிளவுபட்டு காணப்பட்டால் பற்பல துன்பங்களும் இன்னல்களும் விளையும்.

சரீரத்தில் உரோமங்கள் இல்லாதிருந்தால் அவன் உலகப்பற்றை அறுத்தெறிபவனாக இருப்பான்.

ஒருவனது இரத்தம் செக்கச் செவேலென இருக்குமானால் அவனுக்கு ஒரு போதும் துன்பம் ஏற்படமாட்டாது. கறுப்புக்கலந்த சிவப்பு நிறத்தோடு ஒருவனது இரத்தம் இருந்தால் அவனுக்கு கோபம் அதிகமாக இருக்கும். துன்

பங்களை அவன் தொடர்ந்து அனுபவிப்பான். அவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெண் குழந்தைகளாகவே இருக்கும்.

மனிதனின் உயரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் பிரஸ்தாப கையெழுத்துப் பிரதியில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. 40 விரல்கடை உயரமுள்ள ஓர் மனிதன் உலகத்தில் ஒருவராலும் மதிக்கப்பட்டான். (1 விரல்கடை $\frac{3}{4}$ அங்குலம்) அவனது இரகசியங்கள் அவனிடத்தில் தான் இருக்கும். கெட்டவழியிலேயே அவனது புத்தி போய்க்கொண்டிருக்கும். அஞ்சா நெஞ்சனாக இருப்பான். அவன் தனது வாழ்நாள் முழுதும் துன்மார்க்கச் செய்கைகளையே செய்து கொண்டிருப்பான்.

52 விரல்கடை உயரமுள்ளவன் 30 வயதிற்கு மேல் உயிரோடிருக்க மாட்டான். பொதுஜனங்கள் இவனிடத்தில் விசேஷ மரியாதை செலுத்துவார்கள். ஆனால் இவனுக்குப் போதிய அளவு உடைகள் கூட இருக்கமாட்டா.

60 விரல்கடை (3 அடி 9 அங்) உயரமுள்ளவனாக ஒருவனிருந்தால் பலே திருடனாகவோ கொலைக்காரனாகவோ இருப்பான். எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் பின் வாங்க மாட்டான். வெட்கம் மானம் என்பவைகள் அவனுக்கில்லை. அவன் உலகத்தோரை ஏமாற்றியும் வஞ்சித்தும் வாழ்க்கை நடத்துவான். ஆனால் அவன் இறக்கும் வரை சரித்திரனாகவே இருப்பான். இந்தப் பேர்வழி எவருக்கும் பயப்பட மாட்டான். 100 விரல்கடை உயரமிருக்கும் மனிதன் 90 வயதுவரை ஜீவித்திருப்பான். இது அறிவாளிகளின் அபிப்பிராயமாகும். அதிக உயரமுள்ள மனிதன் கெட்டவனாகவோ அல்லது நல்லவனாகவோ இருந்தாலும் அவன் அதிக நாள் ஜீவித்திருப்பான். அவனது வாழ்க்கை உயரிய முறையில் அமைந்திருப்பதோடு அவன் வாக்குவல்லமை வாய்க்கப் பெற்றவனாகவுமிருப்பான். ஒழுங்கான மனிதர்களின் சகவாசம் அவனுக்கு ஏற்படும். இரகசியமென்பதே அவனுக்குக் கிடையாது. அவனது சிறந்த குணத்தின் காரணமாக உலகிற்கேஓர் வழிகாட்டியாக அவன் இருந்து வருவான். ஆகவே அதிக உயரமுள்ள மனிதன் கவலையற்றவனாக வாழ்ந்து வருவான்.

வைத்தியக்குறிப்புகள்.

(காலஞ்சென்ற டாக்டர் மதார் சாயபு.)

வியாதிகட்கு மூலிகைப் பிரயோகம்.

I

கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு அரைக்கால்படி ஆவின்பாலிலாவது, வெள்ளாட்டுப்பாலிலாவது வியாதியின் வலிமைக்குத் தக்கதாய் ஒரு மண்டலம் அல்லது அரைமண்டலம் கொள்ள சுரம், வெட்டை, அரையாப்பு, வாயு, சூலைக்கட்டு, சூலைப்பிடிப்பு, வெடிசூலை, மேனியிற் காடுமுரடாய்க் கட்டுஞ்சூலை, உள் மூலம், கருபத்தைத் தின்னுங் கிரந்தி, யோனியைத் தின்னும் கிரந்தி, கருங்கிரந்தி, அரிகிரந்தி, செங்கிரந்தி, கருப்பவாயு முதலிய ரோகங்கள் நீங்கும். மேனி பொன்போலாகும். புளி தள்ளவும். பாலும் அன்னமுமாய்ப் பத்தியங்கொள்ளவும்.

ஒரு படி ஆவின்பாலில் ஒரு பலம் (3-ரூபாயெடை) கொடிவேலி வேரை நய்யத்தட்டிப் போட்டு பாலைச் சிவக்கக் காய்ச்சி பிரைகுத்தி வைத்திருந்து, மறுநாள் கடைந்து வெண்ணெய் எடுத்து அந்த வெண்ணெய்யையும், மோரையும், அன்னத்துடன்புசித்து அந்த மோரைத்தானே தாகத்துக்குக்குடிக்கவும் மூலமுளை வேரோடே அழுகிவிழுந்துவிடும். இந்தப்படி மூன்று முறை செய்யவும். நோயாளனுடைய தேக ஸ்திதிக்குத்தக்கபடி மேற்படி வேரின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம். மேற்படி வேரை வெள்ளாட்டுப் பாலிற் கொள்ள சில்விஷம், விஷத்தாலுண்டாகும் வியாதிகள் தீரும்.

சஞ்சீவி மூலி என்ற நீலி வேர்ப்பட்டையை அரைத்துக் கொட்டைப்பாக்களவு ஆவின்பாலிலாவது, வெள்ளாட்டுப் பாலிலாவது கொள்ள விஷ ஜெந்துக்களின் கடிவிஷமும், நஞ்சுப் பொருள் விஷமும், கரப்பன் வகைகளும் தீரும். நரை திரை மாறும்.

மேற்படி வேருடன் மிளகு, சித்தரத்தை சமன் கலந்து கசாயஞ்செய்து மூன்று நாட் கொள்ள, எண்ணெய்ச் சிக்கலா லுண்டாகும் நீர்த்தோஷம், சுரம், வெப்பு, நெஞ்சுச்சளி நீங்கும். புளி தள்ளவும்.

மேற்படி இலையை அரைத்து கொட்டைப்பாக்களவு அரைக்காற்படி வெள்ளாட்டுப் பாலில் மூன்றுநாட்கொள்ள மஞ்சட்காமாலை தீரும். புளி தள்ளவும்.

மேற்படி இலையை அரைத்து சிரங்கிற் பூசி வைத் திருந்து மாலையில் ஸ்நானஞ் செய்துவர சிரங்குகள் ஆறும்.

மகாமூலி என்ற ஆகாசக் கருடன் கிழங்கை அரைத்து கொட்டைப்பாக்களவு ஆவின் பாலிற் கொள்ள நரை திரை மாறும், மேனி பொன்போல ஒளியுண்டாம். "காலன்" ஓடி ஒழிவன், சருவ நோய்களும், நீங்காத விஷக்கடி நோய்களும், விஷமும் நீங்கும். புளிதள்ளி பாலும் அன்னமுமாய் ஆகாரங் கொள்ளவும்.

அப்பைக்கிழங்கை கொட்டைப்பாக்களவாய் ஆவின் பாலிற் கொள்ள, முலைக்குத்து, கடிவிஷம், கரப்பன் வியாதி கள் தீரும். புளி, கரப்பன் பதார்த்தம் தள்ளவும்.

வராகிமூலமென்ற நிலைப்பனைக் கிழங்கை கொட்டைப் பாக்களவாய் ஆவின்பாலில் சாப்பிட்டுவர விந்துகட்டும், தாதுண்டாம், ஆண்மை மீறும், தேகபலமுண்டாம், தேகம் இறுகும், தேகம் பொன்போற் பிரகாசிக்கும், சகல வியாதியுந் தீரும்.

மேற்படி கிழங்கை மேனிச்சாற்றால் அரைத்து நல்லெண் ணெய்யிற் காய்ச்சி, பல்வலிக்கும் பாகத்திற்றடவ பல் வலி நீங்கும். அதிலிருக்கும் புழுக்கள் சாகும்.

மேற்படி கிழங்கும் பூமிசர்க்கரைக் கிழங்கும், பூனைக் காலி வித்தும், சமன் தூக்கி, ஆவின் பாலிற் கொள்ள கோசம் பூரித்து விம்மும்.

பங்கம்பாளை என்ற ஆடு தீண்டாமூலி வேரை அரைத்து கொட்டைப்பாக்களவு வெள்ளாட்டுப் பாலிற் கொள்ள சகல விஷங்களும், புண், பிளவை, சிரங்கு, வங்கு, பல கரப்பன், குஷ்டம் தீரும்.

மேற்படி மூலிகை சமூலத்தையும், கருங்குருவை நெல்லு டன் அவித்து அவல் இடித்து வேளை ஒன்றுக்கு அரைக் கரற்படி அவல் வீதம் ஒரு மண்டலங்கொள்ள சிரங்கு, சொறி, குஷ்டம், தழுதணை, வங்கு, வண்டுகடி, அரணைகடி, செய் யான்கடி, பூரான்கடி விஷங்களும், பதகிரி வெள்ளைப்புள்ளி கரப்பன் தீரும். பாலும் மிளகுந்தேய்த்து ஸ்நானம் செய்து வரவும். மூன்று மாதம் வரை நல்லெண்ணெய், புணர்ச்சியை நீக்கவும்.

மேற்படி மூலிகை சமூலம் இடித்துப் பிழிந்தசாறு வெள் ளாட்டுப்பால், வெள்ளாட்டு நெய், வகைக்குப்படி 1, ஒன் றாய்க்கலந்து அதிற் கால்பல மிளகை அரைத்துப்போட்டுக் காய்ச்சி, தேய்த்து ஸ்நானம் செய்துவரவும். மேற்சொன்ன வியாதிகள் தீரும். வேப்பம் வித்து எண்ணெய்யில் மேற்படி மூலிகை சமூலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ் செய்துவர மேற்படி வியாதிகள் தீரும்.

தாமரைக்கிழங்கை ஆவின்பாலிற்கொள்ள மேகம், வெட்டை, கிரிச்சிரம் தீரும். தேகக்காந்தியும், கண் ஒளியும், குளிர்ச்சியு முண்டாம்.

மேற்படி மணிப்பருப்பை பொடித்து முலைப்பாலிற் கலந்து கொடுக்க விக்கல், நாவரக்ஷி தீரும்.

மேற்படி கிழங்கை ஆவின்பால் விட்டரைத்து நல்லெண் ணெய்யிற் போட்டுக் காய்ச்சித்தேய்த்து ஸ்நானஞ் செய்துவர கண் ணுக்குக் குளிர்ச்சியும், ஒளியுண்டாம்.

குண்டலவாதி மூலமென்ற சங்கம் வேரை பாலிற்கொள்ள வண்டுகடி, குஷ்டம், தழுதணை சொறி, தேமல், கிரந்தி, வெட்டை சூலை, செங்கரப்பன், கருங் கரப்பன், சிறு சிரங்கு, பெருஞ் சிரங்கு தீரும். தேக காந்தியுண்டாகும்.

மேற்படி வேர்ப்பட்டை பலம் ஒன்று, மிளகு பலம் அரை ஆவின்பால் விட்டரைத்து உடம்பிற் தேய்த்து ஸ்நானஞ் செய்துவர மேற்படி வியாதிகள் தீரும்.

மேற்படி வேர்ப்பட்டைத்தூள் பலம் ஒன்று, மிளகுத் தூள் பலம் அரை, சர்க்கரை பலம் ஒன்று கூட்டி திரிகடிப் பிர மாணம் சாப்பிட்டுவர மேற்படி வியாதிகள் தீரும்.

நன்னாரி வேரை அரைத்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஆவின்பாலில் இருபது நாட்கொள்ள மூலக்கொதிப்பு அஸ்தி காங்கை, மேகச் சூடு, மேக வெட்டை, நீர்க்கடுப்பு, நீர் இத்து விழுதல், மூத்திரக் கிரிச்சரம் பதினெட்டும், சில்லறை விஷ செந்துக்களின் கடி விஷங்கள், உள் வரட்சியினால் காணும் இருமல், தாப சோமம் நீங்கும். இந்த மூலிகை நாட்பட சாப்பிட்டுவந்தால் நரை திரை மாறும்.

மேற்படி வேர் சிரகப், மல்லி சமன் சூரணித்து சர்க்கரை கலந்து சாப்பிட்டுவர மேற் சொன்ன வியாதிகள் தீரும்.

அமுதவல்லி ஆகாசக் கருடன் என்ற பொற்சீந்தி வேரை அரைத்து கொட்டைப்பாக்களவு ஆவின்பாலில் சாப்பிட்டுவர சகல மேகங்களும், சகல விஷக்கடிகளும், சுரம், தோஷம், சுபாலச் சூடு, வெட்டை நீங்கும். இந்த மூலத்தை நாட்பட சாப்பிட்டுவந்தால் தேகம் பொன்போலாகும.

மேற்படி தண்டின் மாவும், வில்வப் பூவும், கோரோஜனையும், சமன் கலந்து திரிகடிப் பிரமாணம் எருமை மோரில் கலந்து கொள்ள மேக நீரழிவு நீங்கும்.

மாவீழி என்ற பூமி சர்க்கரைக் கிழங்கை பாலிற் கொள்ள பாண்டு விஷபாக வீக்கம், மூத்திரக் கிருச்சரம், மேகம், வெட்டை தீரும், காமம் மிகும், நாதங்கட்டும், நாவில் அமுதம் ஊறும்.

மேற்படி கிழங்கை பாலில் அவித்துக் காயவைத்து தூட் செய்து உழுந்து வறுத்துப் பொடித்த மாவும், எள்ளுப் பொரியும், சமன் கலந்து திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டுவர தேக பல முண்டாகும் நாதங்கட்டும்.

பனங்கோவை பெருங்கோவை என்ற குரட்டை மூலத்தை பாலிற்கொள்ள நரைதிரை மாறும்.

விவாகச் சிறப்பு.

(இங்கர்சால்)

பெண்கள் அடிமைகளுக்கு அடிமைகளாக இருந்து வந்திருக்கிறார்கள்.

அநேக கோடிகாலம் அடிமைகளாக இருந்த பிறகே பெண்களுக்கு விவாகச் சடங்கு ஏற்பட்டது மனித சமூகத்தின் ஆசார அனுஷ்டானங்களில் கலியாணம் மிகவும் புனிதமான தென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இல்லற வாழ்க்கையின்றி மனித முன்னேற்றமே ஏற்படாது. குடும்ப வாழ்வு இல்லையானால் வாழ்க்கைக்குச் சுவையுமில்லை. பல நல்ல குடும்பங்கள் சேர்ந்ததே ஒரு அரசாங்கம். அரசாங்கத்துக்கு அடிப்படை குடும்பமே. எனவே குடும்ப வாழ்க்கைக்கு இடையூறு செய்வனவெல்லாம் தீமையானவைகளே. கலியாணத்தை நான் ஆதரிக்கிறேன். கலியாணச் சடங்கை எதிர்க்கும் தாடிக்காரப் பாதிரிகளையும் மொட்டச்சிகளான கன்னிகா ஸ்திரீகளையும் நான் அறவே வெறுக்கிறேன். ஒரு உத்தமியான பெண்ணின்—அன்பை காதலைப் பெற யோக்கியதை பெறும் வண்ணம் உள்ளத்தையும் மூளையையும் விருத்தி செய்து கொள்வதைவிட உயர்வான—மகத்தான லக்ஷியம் ஒரு புருஷனுக்கு வேறே இல்லை; அதுபோலவே ஒரு கம்பீரமான மனிதனது அன்பைப் பெறத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்வதே ஒரு பெண்ணின் மேலான லக்ஷியமாகும். இதுவே எனது அந்தரங்க சுத்தியான அபிப்பிராயம். காதலும் மணமுமின்றி இந்த வாழ்க்கையில் மனிதனுக்கு வெற்றியே ஏற்படாது.

உலகத்துக்கெல்லாம் நாயகனாயிருப்பதைவிட ஒரு அன்பொழுகும் ஹிருதயத்துக்குத் தலைவனாயிருப்பதே மேல் ஒரு நாட்டுக்கு ராணியாயிருப்பதைவிட ஒரு புருஷனது பூரண அன்பைப் பெறுவதே ஒரு பெண்ணுக்கு வாய்க்கக் கூடிய மேலான பதவி. ஒரு நல்ல மங்கையின் காதலைப்

பெற்ற ஒருவன் சாக்கடையிலே பிச்சைக்காரனாய் இறந்தாலும் நான் லக்ஷ்யம் செய்யமாட்டேன்.

கேவல அடிமை வாழ்க்கையிலிருந்து கலியாண தசையை அடையப் பெண்களுக்குப் பல கோடி வருஷங்கள் பிடித்தன என்று நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். மாதர்களே! நீங்கள் இன்று உடம்பில் அணியும் ஆபரணங்கள் உங்கள் தாய்மாரின் அடிமைச் சின்னங்கள் என்பதை உணர்வீர்களாக! நீங்கள் கழுத்தில் அணியும் சங்கிலிகளும், உங்கள் காதலர்களால் பூட்டப்பட்ட கைவளைகளும் ஒரு காலத்தில் இரும்பாயிருந்து நாகரிகம் என்னும் ரஸவாதியால் இப்பொழுது பொன்னாக மாற்றப்பட்டவை என்பதை நீங்கள் உணர்வீர்களாக!

ஆனால் பெண்களின் துர்க்குணங்களினாலேயே இந்த உலகம் கெட்டுப்போய் விட்டதென்று எல்லா மதங்களும் கூறுகின்றன. இது எவ்வளவு பயங்கரமானது! அது வாஸ்தவமானால் நான் காதலிக்கும் ஒரு பெண்ணுடன் ஒரு நரகத்தில் வாழ நான் விரும்புவேனேயன்றி ஒரு மனிதனுடன் சுவர்க்கத்தில் வாழ விரும்பவே மாட்டேன்.

பழங்கதை

கடவுள் ஒரு உலகத்தையும் ஒரு மனிதனையும் சிருஷ்டிக்க எண்ணி எதையோ எடுத்து ஒரு உலகத்தையும் ஒரு மனிதனையும் உண்டாக்கி, அந்தமனிதனை ஒரு தோட்டத்தில் விட்டாராம். கொஞ்ச நேரத்தில் தனியாகவாழ முடியாமல் அந்த மனிதன் தவிப்பதை கடவுள் உணர்ந்தாராம். ரயில் வண்டியை எதிர்பார்த்து அலைந்து கொண்டிருப்பதுபோல அந்த மனிதன் தோட்டத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தானாம். அவனுக்கு இன்பமளிக்கக்கூடியதாக அந்தத் தோட்டத்தில் ஒன்றுமே இல்லை. சமாச்சாரங்களும் இல்லை; பத்திரிகைகளும் இல்லை; அரசியல் கிளர்ச்சிகளும் இல்லை; கொள்ளைகளும் இல்லை; சாத்தான் அதுவரைப் பிராப்தமாகாததினால் அம்மனிதன் மனக்குறைகள் தீர வழியேதும் காணப்படவில்லை. எனவே அவன் தோட்டத்தில் பைத்தியம் பிடித்தவன் போல் அலைந்துகொண்டிருந்தான். அவன் படும்பாட்டைப் பார்த்துக் கடைசியில் கடவுள் அவனுக்கு ஒரு கூட்டாளியை உண்டுபண்ண எண்ணினானாம்.

உலகத்தையும் மனிதனையும் சிருஷ்டிக்க தன்னிடமிருந்த கைச்சரக்கையெல்லாம் கடவுள் செலவு செய்துவிட்டதினால் அம்மனிதனது உடலிலிருந்தே ஒரு பெண்ணைச் சிருஷ்டிக்கக் கடவுள் எண்ணி அம்மனிதன் மயங்கி விழும்படி செய்தானாம். அவன் மயங்கிவிழுந்த பிறகு அவனது விலா வெலும்பில் ஒன்றைப்பிடுங்கிப் பெண்ணாக்கினானாம். பெண்ணை சிருஷ்டித்து மனிதன் முன் விட்டானாம். அவன் அவளை ஏற்றுக்கொண்டானாம். அவர்கள் து குடும்ப வாழ்க்கை ஆரம்பமாயிற்று; இன்ன இன்ன காரியங்கள் செய்யவேண்டும்; இன்ன இன்ன காரியங்கள் செய்யக்கூடாது என்றும் கடவுள் அவர்களுக்குக் கட்டளை யிட்டானாம். இட்டும், விலக்கப்பட்ட காரியங்களை அவர்கள் செய்து விட்டார்களாம். யார்தான் செய்யமாட்டார்கள்? நான் கூட செய்துதான் இருப்பேன். எப்படியானாலும் அவர்கள் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். அவ்வளவுதான் அன்றுமுதல் பேய்க்கூத்து ஆரம்பமாயிற்றாம். கட்டிகள் சின்னம்மை, குத்திருமல், விஷசுரம் முதலியன மக்களை வாட்டத் தொடங்கினவாம். ஆதி மனிதனுக்கும் மனுஷிக்கும் பல்வலியுண்டாயிற்றாம். ரோஜாச் செடிகளில் முள் உண்டாயிற்றாம்; பாம்புகளுக்கு விஷப்பல்லுண்டாயிற்றாம். மதப் பிரிவுகளும் அரசியல் கட்சிகளும் ஏற்பட்டனவாம்; உலகமே தலைகீழாய் மாறத்தொடங்கிற்றாம்.

இது, நான் ஏதோ ஒரு புத்தகத்தில் படித்த பழங்கதை. இம்மாதிரிக் கதைகள் எல்லா மதங்களிலும் இருக்கத்தான் செய்கின்றன.

இதே சம்பவத்தைப்பற்றி வேறொரு புத்தகத்தில் வேறொரு வரலாற்றையும் படித்தேன், இந்தப் புத்தகம் முன்னையக்கதை அடங்கிய புத்தகத்துக்கு 4000 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டதாம்.

இரண்டாவது எழுதப்பட்ட நூலே ஆதி நூலென்றும் முதல் நூல் இரண்டாவது நூலிலிருந்து பகர்த்தப்பட்டதென றும் எல்லா பாஷியகாரர்களும் ஒரு முகமாக ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், கேவலம நான்கோ ஐந்தோ ஆயிர வருஷ வித்தியாசத்தினால் உங்கள் மதவிஷயம் பாதிக்கப்பட்டு விடாது.

இரண்டாவது கதை.

இரண்டாவது கதை பின்வருமாறு;- பிரம்மா உலகத்தை யும், புருஷனையும், பெண்ணையும் சிருஷ்டிக்க எண்ணினானாம். அமன் முதலில் உலகத்தை சிருஷ்டித்தான்; அப்பால் மனிதனை சிருஷ்டித்தான்; பிறகு பெண்ணை சிருஷ்டித்தான். ஒரு புருஷனையும், பெண்ணையும் இலங்கைத் தீவில் விட்டான் அது மிக அழகான தீவாம். தீவு முழுதும் புஷ்பக்காடாம்; அழகிய பல வர்ணப்பட்சிகள் ஆயிரக்கணக்காக சதா பாடிக் கொண்டு இருக்குமாம். மரங்களின் கிளைகளின் ஊடே காற்றடிக்கும்போது வீணாகானம் எழும்புமாம். அந்தப் புருஷனையும், பெண்ணையும் கடவுள் இலங்கையில் விட்டபோது "கொஞ்ச காலம் நீங்கள் கலந்து பழகி பரஸ்பரம் காதலை விருத்தி செய்ய வேண்டும். அதன் பிறகே கலியாணம் நடக்கும்" என்று கட்டளை யிட்டானாம்.

இது மற்றக் கதையைவிட மனோஹரமானதல்லவா? அவ்விரண்டு கதைகளுள் ஏதாவதொன்று மெய்யானால் இந்தக் கதைதான் மெய்யாக இருக்கவேண்டும்.

அவ்வாறே அவர்கள் கலந்து பழகி காதலை விருத்தி செய்தார்கள். வானம்பாடிகள் பாடின. வானமண்டலத்திலே நக்ஷத்திரங்கள் ஜோலித்தன. புஷ்பச்செடிகள் மலர் தூவின. அவர்களுக்குள் பரஸ்பர காதல் ஏற்பட்டது. இதில் ஒரு முக்கியமான விஷயம். பெற்றோர்களோ சுற்றத்தாரோ அவர்களை அறிமுகப்படுத்தவில்லை. மாமனாரோ, மாமியாரோ மணம் பேசவில்லை. அவர்களது காதல் இயல்பாக வளர்ந்தது. பிரம்மதேவனே அவர்களுக்கு மணம் முடித்து வைத்தான். அப்பால் அவர்கள் அந்தத்தீவை விட்டு வேறு எங்கும் போகக்கூடாதென்று கட்டளையிட்டானாம்.

கொஞ்ச நாள் கழிந்தபின்பு ஆதாமி என்ற அந்த மனிதன் ஹேவா என்ற தன் மனைவியை நோக்கி "நான் இத்தீவைச் சுற்றிப்பார்க்கப் போகிறேன்" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றான். தீவின் வடகோடிக்குச் சென்றபோது அந்தத்தீவையும் வேறொரு பெரியதேசத்தையும் இணைக்கும் பூசந்தி ஒன்று இருப்பதாகக் கண்டான். சாத்தான் அவனை பிடித்துக்கொண்டதினால் அந்தத் தேசம் தீவைவிட மிக அழகாக இருப்பதாய் அவனுக்குத் தோன்றிற்று. எனவே அவன் தன் மனைவியிடம் சென்று அந்த அழகிய தேசத்தில்

குடியேறி சந்தோஷமாயிருக்கலாமென்று சொன்னான். அதற்கு அவள் இணங்கவில்லை. "எல்லா வசதிகளும் இங்கு இருக்கின்றனவே, அங்கே ஏன் போகவேண்டும்? இங்கேயே இருந்து விடுவோம்" என்று அவள் சொன்னாள். "வேண்டாம், நாம் போகத்தான் வேண்டும்" என்று அவன் பிடிவாதம் செய்தான். வேறு கதியில்லாததினால் அவளும் அவன் பின் சென்றாள். அவர்கள் அந்த ஒடுக்கமான பூசந்தியை அடைந்தபோது அவன் தன் மனைவியை தோளில் தூக்கிக்கொண்டு பூசந்தியைக் கடந்து பெரிய தேசத்தையடைந்தான். அவர்கள் பெரிய தேசத்தையடைந்ததும் ஒரு பெரிய சப்தம் கேட்டது. அவர்கள் திரும்பிப்பார்த்தார்கள். பூசந்து கடலுக்குள் ஆழ்ந்து விட்டதைக் கண்டார்கள். அவர்கள் சென்ற தேசமோ பாறைகள் நிறைந்த மணல் காடாயிருந்தது. புல் பூண்டுகள் கூடக் காணப்படவில்லை.

பிரம்மா கோபம் கொண்டு "நீங்கள் நரகத்தில் விழுந்து அழுந்துங்கள்" என்று சபித்தான்.

ஆதாமி குறுக்கிட்டு "என்னை வேண்டுமானால் சபித்து விடு; நானே அவளை இங்கு கொண்டுவந்தேன்; அவள் ஒரு பாவமும் அறியாள்; அவளைச் சபியாதே" என பிரம்மாவினிடம் வேண்டிக்கொண்டான்.

அந்த மனிதனே தீரன்; வீரன். உலகத்தின் மூதாதையாக இருப்பதற்கு அவனே உரியவன்.

"சரி, ஆனால் அவளைக் காப்பாற்றுகிறேன். உன்னைக் காப்பாற்ற மாட்டேன்" என்று மீண்டும் பிரம்மா சொன்னான்.

அது ஹேவாளுக்குத் திருப்தியளிக்கவில்லை." அவனைக் காப்பாற்றா விட்டால் என்னையும் காப்பாற்ற வேண்டாம். நான் அவனைக் காதலிக்கிறேன். அவனின்றி என்னால்உயிர் வாழமுடியாது" என்று அவள்பிரம்மாவிடம் முறையிட்டாள்

பிரம்மாவுக்கு கருணையுண்டாகிவிட்டது. "சரி, உங்களையும் உங்கள் சந்ததிகளையும் நான் காப்பாற்றுகிறேன்" என்று பிரம்மா வரமளித்தான்.

இந்த பிரம்மா மகாயோக்கியன் தான். இந்தக்கதை மற்றக்கதையைவிட மேலானதல்லவா?

அந்த விசுவாசிகளின் குணாதிசயங்களைக் காட்டும் சில விஷயங்களை அந்த நூலிலிருந்து எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அந்த அவிசுவாசிகளுக்கு ஞானோபதேசம் செய்ய நாம் பாதிரிமாரை அனுப்புகிறோம், அவர்களைக்கொல்ல நாம் போர் வீரர்களையும் அனுப்புகிறோம். ஞான ஸ்நானம் மூலம் அந்த அவிசுவாசிகளைப் புனிதப்படுத்த முடியுமானால் நம் நாட்டிலுள்ளவர்களை நாம் ஏன் புனிதப்படுத்தக்கூடாது? ஆனால் நாம் புனிதமாக்க விரும்பும் அவிசுவாசிகளின் குண விசேஷங்களைப்பற்றி அந்நூலில் கூறப்பட்டிருப்பதைப் பாருங்கள். "புருஷன் வலிமைக்கும் வீரத்துக்கும் இருப்பிடம். பெண் அழகுக்கு தாயகம்; புருஷன் பெண்ணையும் பெண் புருஷனையும் உண்மையாகக் காதலித்தால், தேவதூதர்கள் சுவர்க்கத்தைவிட்டு அவர்கள் வீட்டுக்கு வந்து ஆனந்த பரவசராகிப் பாடிக்கொண்டு இருப்பார்கள்."

இவ்வளவு உயர்வான கருத்துடைய மனிதர்களை நாம் புனிதமாக்கப் போகிறோமாம்! எவ்வளவு வேடிக்கை பாருங்கள்!

நான் அவ்வரலாற்றைப்படித்தபோது, காதல் எந்த நாட்டுக்கும் சொந்தமானதல்லவென்றும், பெருந்தன்மை எந்த ஜாதியாருக்கும் குடும்பச் சொத்தல்லவென்றும் எல்லா இடத்தும் எல்லாக் காலத்தும் புண்ய சீலர்களும் வீரர்களும் இருந்திருப்பார்கள் என்றும் உணர்ந்துகொண்டேன்.

10 சுகாதார விதிகள்.

சுகவாழ்வை விரும்புகிற ஒவ்வொருவரும் கீழ் வரும் பத்துவிதி களை யனுசரித்தல் வேண்டும்.

1. தூக்கம்.

நல்ல காற்றோட்டமுள்ள அறையில் ஒவ்வொரு இரவும் 8-மணி நேரம் நித்திரை கொள். உடனே தூக்கம் பிடிக்கைவில்லையேல் சூடான பால் சிறிது குடித்துக்கொள்.

2. பற்கள்.

உன் பற்களை நன்கு கவனித்துக்கொள். காலயிலும் இரவிலும் முடியுமானால் சாப்பாட்டுக்குப் பின்னும் உன் பற்களை சுத்தம் செய். பற்கள் வரிசையாயில்லையேல் பட்டுநூலால் சுத்தம்செய் கொட்டைப் பாக்கைப் போன்ற கடின வஸ்துக்களை உன் பற்களால் கடிக்காதே. 4-மாதத்துக்கொரு முறையாவது பல் டாக்டரிடம் உன் பற்களைக் காட்டு.

3. கூந்தல்.

உன் கூந்தலை நன்கு கவனி. ஒவ்வொரு இரவும் உன் உச்சியை நன்குதேய். காதுகளுக்குமேல் தலையின் இருபக்கங்களையும் நன்றாக இரு கைகளாலும் இறுக்கி விரல்களால் உச்சியை தேய். பிறகு சூடு உண்டாகும்வரை தலையை ப்ரஷால் நன்றாய் தேய்.

4. கண்கள்.

கண்களைப்பற்றி கவலைகொள். கண்சிமிட்டுவது நல்லது. கண் களை விழித்தவண்ணமாகவே தண்ணீரை கண்களுக்குள் தெளி. கண் களை மூடி இமைகளை கைவிரலின் நுனியால் மெதுவாக தடவு.

5. இருதயம்.

அதிக உழைப்பால் இருதயத்தில் வலியுண்டாகிறது. ஆதலால் சாப்பிட்ட உடனே ஓடவோ, குளிக்கவோ, கடுமையான தேகாப்பியாச மோ செய்யாதே.

6. ஈரல்

உன்வாழ்வே ஈரலைப்பொருத்து தானிருக்கிறது என்பதை மறந்து விடாதே. உன் தேகத்திலுள்ள அசுத்தங்களை-கழிவுப்பொருள்

களை வெளிப்படுத்துவது மூலம்தான். அது சரியாகவேலை செய்ய வில்லையானால், அதாவது அந்த அசுத்தங்கள் உள்ளே தங்கிவிட்டால் உன் இரத்தத்துடன் சேர்ந்து விடுகின்றன.

7. பாதங்கள்.

உன் பாதங்களை கவனித்துக்கொள். உன் உடலின் பாரத்தை தாங்கக்கூடியவை. பொருத்தமான செருப்புகளை அணிந்துகொள். கால் விரல்களால் செய்ய கூடிய அப்பியாசங்களை செய்.

8. பால்

ஏராளமாக பால்குடி. ஒருநாளைக்கு உனக்கு குறைந்தது 2 'பைண்ட்' பால் தேவை. அதில் உன் உடலுக்குத் தேவையான 'வைட்டமின்' கள் சகலமுமிருக்கின்றன. சுண்ணாம்பு சத்தும் கொடுக்கக் கூடியது. ஏனைய 'ப்ரோட்டின்' சத்துள்ள ஆகாரங்கள் அதிகமான புளிப்பை யுண்டுபண்ணக்கூடியவைகள்.

9. தண்ணீர்.

தண்ணீரையும் ஏராளமாகக்குடி. சாதாரணமாக ஒரு நாளைக்கு 5-'பைண்ட்' தண்ணீர் உன் திரேகத்தை விட்டு வெளிச் செல்லுகிறது. உனக்கு அதிக தண்ணீர் வேண்டுமென்பதை உன் நாவில் ஊறும் உமிழ் நீரே அறிவிக்கும்.

10. கவலை.

கவலைப்படாதே. அதற்குபதில் அதிக வேலை செய்.

செய்யத் தகாதவை 6.

1. அவசரமாக சாப்பிடாதே.

2. ஒருவேலை சாப்பிட்டு மறுவேளைக்கு அதிக நேரம் காத்திராதே.

3. அதிக சூடான டீ, காப்பி, கோக்கோ முதலிய பானங்களை குடிக்காதே.

4. பழங்களை அதிகமாக உபயோகிக்க மறக்காதே.

5. அதிகமாக மாவு சத்துள்ளதும், இனிப்புள்ளதுமான பண்டங்களை சாப்பிடாதே.

6. மிதமிஞ்சி சாப்பிடாதே. இன்னும் சிறிது சாப்பிடலாம் என்று உணரும் அளவுக்குமேல் சாப்பிடாதே.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

என் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0
பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0
கடவுள் ... ... ,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0
வால்ட்டேர் ... ... ,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு ... ... ,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் 0 6 0
ஷை 2-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0
ஷை 2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும், மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... ,, 0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.) 0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

—(0)—

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை?	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியா காண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம் பதிப்பு) 200 பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று, மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம்	0	2	0
15.	அகஸ்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	[illegible] (இங்கிலீஷ்)	0	2	0
18.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
19.	சோஷியலிசம்	0	2	0
20.	போல்ஷ்விக் முறை	0	1	0
21	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	6
22.	சமதர்ம உபந்யாசம்	0	0	9
23.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
24.	மனுநீதி விளக்கம்	0	2	0
25.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
26.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
27.	புதுரஷ்யா (200 பக்கம்)	0	8	0
28.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
29.	[illegible]	0	6	0
30.	ராவணப் பெரியார்	0	5	0
31.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
32.	நரகம் எங்கே?	0	2	0
33.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
34.	[illegible] அல்லது [illegible] கட்டுரை	0	5	0
35.	ஹிந்தி எதிர்ப்புப் பாடல்கள்	0	2	0
36.	காரல் மார்க்ஸ்	0	2	0
37.	மனிதன் என்றால் என்ன?	0	6	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy
at the Unmaivilakam Press, Erode.